உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-171

டிசம்பர் 16-31 2023



e-magazine

## கடன், சங்கடங்கள் போக்கும் திருபுவனம் சரபேஸ்வரர்

# தமிழுக்கு பெருமை சேர்க்கும் மார்கழி மாதம்

# துளசியால் அர்ச்சனை செய்தால் கணவன்-மனைவி பிரச்சனையை தீர்க்கும் சிவன்

தமிழ்நாட்டிலேயே சிவபெருமானுக்கு துளசியால் அர்ச்சனை செய்யப்படும் கோவில் இதுவாகத்தான் இருக்கும், மற்ற மாநிலங்களை பற்றி எனக்கு தெரியவில்லை...!

அகத்தியர் பிரதிஷ்டை செய்த 108 லிங்கங்களுள் ஒன்று துளசீஸ்வரர்...!

இவர் சிங்கப்பெருமாள் கோயில் வல்லக் கோட்டை பாதையில் உள்ள கொளத்தூரில் கோயில் கொண்டிருக்கிறார்...!

பொதுவாக வில்வ தளங்களால் சிவ பெரு மானுக்கு அர்ச்சனை செய்யப்படும். இத்தலத்தில் துளசி தளங்களால் செய்யப் படுகிறது....!


ஒற்றுமையில்லாத கணவன்மனைவி மற்றும் ஜாதகத்தில் சந்திர பலம் குறைந்தவர்கள், இந்த ஈசனை துளசி தளங்களால் அர்ச்சித்து வணங்க, அந்த குறைபாடுகள் நீங்குவதாக ஐதீகம்...!!




## வீண் குற்றச்சாட்டு

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளையெல்லாம் தங்களுடன் வாழ் பவர்கள் மீதோ, அல்லது தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற் பித்துக் கொண்டு, அதைத் தலைவிதி என்று சொல்கிறார்கள். விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத் தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக்கொள்கிறோம். எனவே, அதன் பொருட்டுத் தூற்றுவதற்கும் ஒருவருமில்லை; பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை. நான் அனு பவித்துக் கொண்டிருக்கும்இந்தத் துன்பம், என்னுடைய சொந்தச் செயல்களாலேயே உருவாக்கப் பட்டிருக்கிறது. இந்த ஒரு நிலையே, என் ஒருவனால் மட்டுமே அது நீக்கப்பட வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.....



## சூரியவம்சம்

அயோத்தியை ஆண்ட வம்சம் சூரியவம்சம். நீதி நேர்மை தவங்மல் ஆட்சிபுரியும் நல்லமன்னர்கள் பிறந்த குலம் இது. எவ்வளவு துன்பம் நேர்ந்தபோதும், உண்மையிலிருந்து விலகாமல் சத்தியம் பேசிய அரிச்சந்திரன், சனிதோஷம் போக்கும் நளச்சக்கரவர்த்தி, பசுக் களுக்கு வாழ்வு தந்த திலீபச்சக்கரவர்த்தி, தசாவதாரங்களில் ஒருவராக வணங்கப்படும் ராமபிரான் ஆகியோர் சூரியகுலத்தில் தோன்றியவர்கள். கொடை வள்ளல் கர்ணனும் சூரியனின் பிள்ளையே. சூரியனை வழிபட்டவர்கள் சூரியகுலத் தோன்றல் களான இந்த மன்னர்களின் நல்லாசியையும் பெறுவர் என்பது உறுதி.



e-magazine
aanmeegamalar.com
aanmeegamalar.com

# விஷ்ணுவுக்கு சாபம் கொடுத்த துளசி

# துளசிக்கு வரம் கொடுத்த மகாவிஷ்ணு

e-magazine
aanmeegamalar.com

சங்கசூடன் எனும் அசுரன் தேவர்களை வதைத்து வந்தான். அவனிடம் இருக்கும் கவசத்தை விஷ்ணு பெற்றதால், பலமிழந்த இவனை சிவன் கொன்றார். இவன் உடல் சிதறிய பாகங்களே சங்குகளாக விளைகின்றன.

சங்கசூடனின் மனைவி துளசி. மஹா தபஸ்வினி. கணவரைக் கொல்ல காரணமாயிருந்த விஷ்ணுவை "பாஷாணமாகுக" என சபித்தாள்.

அதற்கு மஹாவிஷ்ணு "உன் பூர்வ ஜன்ம பயனே நீ இந்த நிலை அடைந்தாய். உலக நன்மை பொருட்டு நான் பாஷாணமாகின்றேன்.

இனி நீ இந்த உடலை நீக்கி, உன் ஆத்மா கோலோகம் அடைவதாக. உன் உடல் 'கண்டகி' நதியாகவும், உனது ரோமங்கள் துளசி செடிகளாகவும் உருவாகி, துளசி மூன்று லோகங்களிலும் பூஜைக்குரியதாக தேவர்களாலும், மனிதர்களாலும் தெய்வத் தன்மையுடைய மூலிகையாக சிறப்படையட்டும்" எனும் வரங்களை அளித்தார்.

துளசி கொடுத்த சாபத்தால், மஹா விஷ்ணு கண்டகி நதியில் சிலா ரூபமாகபல்கிப் பெருகி, விஷ்ணு அம்சமாக, சாளக்ராமங்களாக உருவெடுத்து அருள் செய்து வருகிறார்.



சாளக்ராமம் என்பது நெல்லிக்கனி அளவு முதல் ஆறடிக்கு மேல் உயரம் கொண்டு வளர்வதாகும்.

இந்தக் கல்லின் மேற்புறம் முதல் நடுப்பகுதி வரை ஒரு மெல்லிய துளை (ஈர்க்கு நுழையும் அளவு) இருக்கும். உட்புறம் சங்கு, சக்கரம், தாமரை, ஆகிய விஷ்ணுவின் சின்னங்களைக் கொண்டதாக இருக்கும்.

சாளக்ராம சிலைகள் மூலவராக அமையப் பெற்ற ஆலயங்கள், தரிசிக்கும் பக்தர்களுக்கு விரைவில் பலன் தரும் ஆலயங்களாக பிரசித்தி பெற்றுள்ளன.

உதாரணமாக, ப்ருந்தா வனத்தில் ஸ்ரீ க்ருஷ்ணரின் மூலவர் சிலை சாளக்ராமத்தால் ஆனது.

தஞ்சை மாரியம்மன் கோயில் எனும் ஊரில் உள்ள ஸ்ரீ கோதண்டராமர் ஆலய மூலவர் சிலை (ஆறடி உயரம் உள்ளது) சாளக்ராமத்தினால் ஆனது.

முன்பு குறிப்பிட்டது போல், இந்த சிலையின் உச்சியில் ஒரு துளை உள்ளது. அந்தத் துளை சுமார் 3½ அடி ஆழத்திற்கு, ஒரு ஈர்க்குச்சிமட்டுமே நுழையக் கூடியதாக உள்ளது.


மகாவிஷ்ணுவின் அவதாரமான சாளக்கிராமத்தை வழிபட்டால் நேரிடையாக விஷ்ணுவை வழிபட்ட பலன் கிடைக்கும்

## தமிழுக்கு பெருமை சேர்க்கும்

# மார்கழி மாதம்

## திருப்பாவைவும் திருவெம்பாவையும் வீதிதோறும் பாடப்படும் மாதம்

e-magazine
aanmeegamalar.com



மார்கழி மாதத்தை சைவர்கள் தேவர் மாதம் என்று குறிப்பிடுவர். அதாவது கடவுளை வழிபடும் மாதமாகும். இறைவனை வழிபடுவதற்காக இம்மாதம் ஒதுக்கபட்டுள்ளதால் இம்மாதத்தில் எவ்வித மங்கல நிகழ்ச்சிகளும் நடத்தப்படுவதில்லை. திருவெம்பாவை விரத காலத்தில் சைவர்கள் வீதி தோறும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடல்களைப் பாடிக்கொண்டும் ஒவ்வொரு பாடல் முடிவிலும் சங்கு ஊதிக்கொண்டும் ஆலயங்களுக்குச் செல்வர். விஷ்ணு ஆலயங்களில் மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவை பாடுவர்.

### சுப்ரபாதத்திற்கு பதில் திருப்பாவை

இந்த மாதத்தில் திருப்பதி திருமலையில் காலையில் சுப்ரபாதம் பாடுவதற்கு பதிலாக ஆண்டாளின் திருப்பாவை பாடுவார்கள்.



இந்த மாதத்தில் எல்லா பெருமாள் கோயில்களிலும் சுப்ரபாதத்துக்கு பதில் திருப்பாவை பாடுவார்கள்.

வருடத்தின் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு சிறப்பு உண்டு.

ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு மாதமும் கொண்டாடப்படுகிறது.

அவற்றில் மிக உயர்வானதாக சொல்லப்படுவது மார்கழி மாதம். இது இறை வழிபாட்டிற்கே உரிய மாதம் ஆகும். அதனால் தான் அர்ஜூனனுக்கு செய்த கீதை உபதேசத்தில், மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என கிருஷ்ண பகவான் விரும்பி சொல்லி உள்ளார்.

மார்கழி மாதம் குளிர் காலத்தின் துவக்கமாக மாதம் கருதப்படுகிறது. பூமியின்

வடகோளப்பகுதியில் உள்ளோருக்கு டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் குளிர்காலங்களாகும். குளிர்காலத்தின் துவக்கம் டிசம்பரில் துவங்குகிறது.

குளிர்காலத்தின்போது துருவப்பகுதிகள் மிகக் குளிர்ந்து இருக்கும். அங்கு சில மாதங்கள் சூரியனைத் தொடர்ந்து காண முடியாது. அப்போது வறண்ட குளிர்காற்று அந்தப் பகுதியிலிருந்து தெற்குப்பகுதி நோக்கி வீசத்துவங்கும். ஆகையால் தென்பகுதிகளின் வானிலை வெப்பநிலை மற்றும் பகற்பொழுதின் அளவும் மாறுபடத் துவங்குகின்றன. பூமத்திய ரேகையை ஒட்டிய வெப்பமண்டல பிரதேசங்களில் நிலவும் வெப்பநிலையில் அதிக மாறுதல் ஏற்படுவதில்லை என்றாலும், மழை பொழிவின் காரணமாக சில பகுதிகளில் ஈரமிக்கதாகவும் மற்றபகுதிகளில் வறண்டும் காணப்படும்.

## உயிர்ப்பு இல்லாத மாதம்

பொதுவாக உயிர்ப்பு இல்லாத மாதம் என்பதால் தான் இந்த மாதத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளையும், விதை விதைப்பது போன்ற பணிகளையும் தவிர்க்க வேண்டும் என சொல்லி வைத்துள்ளார்கள் நமது முன்னோர்கள்.

மார்கழி மாதத்தில் சூரிய பகவான், குரு பகவானின் வீட்டில் சஞ்சரிக்கும் காலம்.

## ஆத்மா விழிப்படைய உகந்த மாதம்

மேலும் இந்த மாதம் மனித ஆத்மாவையும் எழுப்பக் கூடிய மாதம் என்பதால் தான் மார்கழி மாதத்தில் அதிகாலையில் திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி போன்ற பாடல்களை பாராயணம் செய்ய வேண்டும் என செல்லப்படுகிறது.

## வேண்டியதை தரும் மாதம்

இது தேவர்கள் கண் விழிக்கும், அதிகாலை பொழுதாக சொல்லப்படுகிறது. அதாவது தேவர்களுக்கு பிரம்ம முகூர்த்த காலம் ஆகும். அவர்கள் கண் விழிக்கும் சமயத்தில், நாம் இறை வழிபாட்டில் ஈடுபட்டு, என்ன வேண்டிக் கொண்டாலும் அதை அப்படி அவர்கள் அருள்வார்கள்.

## ஆண்டுமுழுவதும் வழிபட்ட பலன் தரும் மாதம்

இதன்காரணமாகத்தான் மார்கழியின் 30 நாட்களில் ஏதாவது ஒரு நாளாவது அதிகாலையில் எழுந்து, விளக்கேற்றி, வழிபாட்டில் ஈடுபட்டால், ஒரு ஆண்டு முழுவதும் அதிகாலையில் வழிபாடு செய்த பலன் தரும் அளவிற்கு உயர்வான பலன்களை தரக் கூடிய மாதமாக மார்கழி திகழ்கிறது.

அறிவியல் ரீதியாக ஓசோன் படலம் பூமிக்கு மிக அருகில் வரும் காலம் என்பதால் இந்த மாதத்தில் அதிகாலையில் எழுந்து பெண்கள் வாசலில் கோலமிட வேண்டும் என்றும், ஆண்கள் பஜனைக்கு செல்ல வேண்டும் என்றும் சொல்லி வைத்தார்கள் நம் முன்னோர்கள்.

மார்கழி மாதத்தில் சூரிய உதயத்திற்கு முன்பாக எழுந்து, குளித்து விட்டு இறை நாமங்களை ஒரு முறை சொன்னால் கூட, மற்ற நேரங்களில் ஒரு கோடி முறை நாம ஜபம் செய்ததற்கு சமமான பலன் கிடைக்கும்.

## ஆண்டுமுழுவதும் அன்னதானம் செய்த பலன்

அதேப்போன்று இந்த மாதத்தில் கோவில்களில் நடைபெறும் தனுர் மாத பூஜையில் அவசியம் பங்கேற்க வேண்டும். தனுர் மாத பூஜைக்காக நம்மால் முடிந்த ஏதாவது பிர சாத நைவேத்தியத்தை வழங்க வேண்டும். கோவிலுக்கு வருபவர்களுக்கு அதை பிரசாதமாக வழங்கினால் ஒரு ஆண்டு முழுவதும் அன்ன தானம் செய்த பலன் கிடைக்கும்.



e-magazine
aanmeegamalar.com


# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ-மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



# தீபமாக காட்சிதரும் சிவனை தரிசித்தால் கிடைக்கும் பலன்கள்




- திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபத்தை நேரில் பார்ப்பவர்களின் 21 தலை முறைக்கு முக்தி கிடைக்கும்
- திருவண்ணாமலை தீபத்தன்று மலையை பார்த்து "நமசிவாய" சொன்னால், அந்த மந்திரத்தை 3 கோடி தடவை உச்சரித்த புண் ணியம் கிடைக்கும்
- திருவண்ணாமலை உச்சியில் தீபம் ஏற்றப்படும் போது மலைக்கு உள் பகுதியிலும் பூஜைகள் நடக்கும் ஒலி கேட்டதாக ரமணர், சேஷாத்திரி சுவாமிகள் உள்பட பல அருளாளர்கள் கூறியுள்ளனர்
- திருவண்ணாமலையில் கார்த் திகை தீபம் ஏற்றப்பட்ட பிறகு அதைப் பார்த்து வணங்கியபடி கிரிவலம் வந்தால், அந்த ஜோதி யின் கதிர்கள் நம் உடம்பில் பட்டு ஆன்மசக்தி அதிகரிக்கும் என் பது ஐதீகம்
- தீபத் திருநாளில் 5 தடவை (மொத்தம் 70 கி.மீ. தூரம்) கிரிவலம் வந்தால், அவர்கள் எவ்வளவு பெரிய பாவம் செய்திருந்தாலும், அவற்றில் இருந்து முழுமையான விமோசனம் கிடைக்கும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது
- மலை மீது தீபம் ஏற்றப்படும் போது, "தீப மங்கள ஜோதி நமோ, நம" என்ற பாடலை பாடி வழிபட்டால் வாழ்வில் மங்களம் பெருகும்
- கார்த்திகைத் தீபத்துக்கு மூன்றா வது நாள் மலையை பஞ்ச மூர்த்திகளும் வலம் வருவது மிகச்சிறப்பாக நடைபெறும்
- திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை காண சித்தர்கள் வரு வார்கள் என்பது நம்பிக்கைஅப்படி வரும் சித்தர்கள் மலை உச்சியில் தீபம் ஏற்றும் கொப்பரை நெய் யில் சக்தி வாய்ந்த மூலிகைத் தைலங்களை சேர்த்து விடுவ தாகச் சொல்கிறார்கள். இதனால் தீபத்தில் இருந்து வெளிப்படும்

e-magazine
aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

புகை தீய சக்திகளை அழிப்பதாக கருதப் படுகிறது

- திருவண்ணாமலை மலை சுமார் 2,668 அடி உயரம் கொண்டது. கீழ் இருந்து மலை உச்சி வரை செல்ல சுமார் 8 கி.மீ. பாதை உள்ளது. மலை ஏற சுமார் 4 மணி நேரமாகும்
- திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு, சர்வாலய தீபம், கார்த்திகை விளக்கீடு, ஞானதீபம், சிவஜோதி, பரஞ்சுடர் என்றும் பெயர்கள் உண்டு
- கார்த்திகை தீபத்தன்று கிரிவலம் செல்பவர்களுக்கு ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்
- கார்த்திகை தீபம் தினத்தன்று சிவலிங்கம் முன்பு நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தால், அவர்களது வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் என்பது நம்பிக்கை
- கார்த்திகை தீபம் ஏற்றப்படும் காட்சியை நேரில் பார்த்து வழிபடுபவர்களுக்கு சகல தானம் கொடுப்பதால் கிடைக்கும் புண்ணியங்கள் கிடைக்கும்
- கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத் தில் திருவண்ணாமலை தலத்தில் ஏதாவது ஒரு இடத்தில் தீபம் ஏற்றி வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்
- திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்ற பயன்படுத்தும் கொப்பரை சுமார் 2 ஆயிரம் லிட்டர் நெய் பிடிக்கும் அளவு கொண்டது
- மலை உச்சியில் ஏற்றப்படும் தீபத்தின் ஒளி சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவுக்கு தெரி யும்
- இந்த தீபம் சுமார் 11 நாட்கள் தொடர்ந்து எரியும் என்பது குறிப்பிடத்தக்கது
- திருவண்ணாமலையில் கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு, பரணி தீபம், அண்ணாமலையார் தீபம், விஷ்ணு தீபம், நாட்டுக் கார்த்திகை தீபம், தோட்டக் கார்த்






திகை தீபம் என 5 வகையான தீபங்கள் ஏற்றப்படும்

- சிவபெருமான் கார்த்திகை தீபநாளில் அக்னியில் நடனம் ஆடுவதாக ஐதீகம். இந்த நடனத்துக்கு முக்தி நடனம் என்று பெயர்
- கார்த்திகை தீபம் தினத்தன்று ஆலயங்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். ஆனால் திருவண்ணாமலையில் சொக்கப்பனை கொளுத்தும் பழக்கம் இல்லை
- தீப நாளில் மலை மேல் தீபம் காண முடியாதவர்கள், தீப தரிசன நேரத்தில் அதை நினைத்தாலே, அதற்குரிய பலன்கள் கிடைக்கும் என்பது பெரியோர் வாக்கு
- திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு நிகராக இதுவரை வந்த ஆலயத்திலும் ஜோதி வழிபாடு ஏற்பட்டதில்லை
- திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபம், அண்டசராசரங்களுக்கும் தீப விளக்காக கருதப்படுகிறது
- திருவண்ணாமலையில் ஏற்றப்படும் தீபம், உலகத்தை எல்லாம் இயக்குகின்ற பரம் பொருள் ஒன்றே என்பதை "இறைவன் ஒருவனே" என்ற தத்துவத்தை உணர்த்துகிறது
- கார்த்திகை தீபத்தன்று அதிகாலை திருவண்ணாமலை கோவிலில் பரணி நட்சத்திர நேரத்தில் ஏற்றப்படும் பரணி தீபத்தை அங்குள்ள சொர்ண பைரவர் சன்னதியில் வைத்து விடுவார்கள் பிறகு மாலையில் அதைத்தான் மலை உச்சிக்கு எடுத்துச் சென்று தீபத்தை ஏற்றுவார்கள்
- திருவண்ணாமலை தீபத்தை காண கடந்த ஆண்டு சுமார் 20 லட்சம் பக்தர்கள் திரண்டனர்
- திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றப்பட்டதும் வணங்கினால் பாவம் நீங்கி பிறவிப் பிணியை அறுக்க வல்லது என்பது ஐதீகமாகும்
- திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்பட்டதும், "அண்ணாமலையாருக்கு அரோகரா" என்று பக்தர்கள் முழக்கமிடுவார்கள். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? "இந்த உடம்பு நான் என்னும் எண்ணத்தை அழித்து, மனதை ஆன்மாவில் அழித்து, உள்முகத்தால் அத்வைத ஆன்ம ஜோதியைக் காண்பது தான் இந்த தீப தரிசனம் ஆகும்" இதை சொல்லி இருப்பவர் ரமண மகரிஷி
- பஞ்சபூத தலங்களுக்குள் இது நெருப்புக்குரிய தலம் இங்கு மலையே இறைவனின் சொரூபமாக உள்ளது.

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

170 க்கும் மேற்பட்ட இதழ்களை




aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# உலகின் அத்தனை செல்வமும் குபேரனிடம் சேர்ந்தது எப்படி?



e-magazine
aanmeegamalar.com

செல்வத்துக்கு அதிபதியாகத் திகழ்பவர் குபேரன். பக்தியுடன் பூஜிப்போர்க்கு சகல ஐஸ்வர்யங்களையும் அருள்பவர். அழகாபுரி பட்டணத்தில், அழகிய அரண்மனையில், மீன ஆசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிபவர். தாமரை மலர் ஏந்தி, வரத முத்திரை காட்டி, வருபவர்களை செல்வச் செழிப்பாக மாற்றுபவர். வெண் குதிரை இவரது வாகனம்.

இவரது மடி மீது கீரிப்பிள்ளை அமர்ந்து இருக்கும். ஒவ்வொரு வியாழக்கிழமை மாலை 5:30 மணிமுதல் 6:00 மணி வரை `குபேர காலம்' என்று வழங்கப்படுவதால், அந்த நேரத்தில் இவரை வணங்கினால், செல்வச் செழிப்பு உண்டாகும். மனைவி சித்திரரேகையோடு இணைந்து அன்பர்களுக்கு அருளாசி வழங்குபவர்.

நளகூபன், மணிக்ரீவன் என்ற இரு மகன்கள் குபேரனுக்கு இருக்கிறார்கள். சிவந்த மேனியும் குள்ளமான உருவமும், பெரிய வயிறும் உடையவராக இவர் வர்ணிக்கப்படுகிறார். பத்ம நிதி, மஹாபத்ம நிதி, மகர நிதி, கச்சப நிதி, குமுத நிதி, நந்த நிதி, சங்க நிதி, நீலம நிதி, பத்மினி நிதி என நவநிதிகளையும் பாதுகாத்து அருளுபவர். இதில் பதும நிதி, சங்க நிதி ஆகிய தெய்வ மகளிரின் கணவரும் இவர்தான்.



அது சரி... உலகின் அத்தனைச் செல்வங்களும் குபேரனிடம் வந்த காரணம் என்ன... நேர்மையானவரிடம் தானே நிதிப்பொறுப்பை கொடுப்பார்கள்... சிவபெருமானே குபேரனை செல்வத்தின் அதிபதியாக நியமித்த காரணம் என்ன... அத்தனை சிறப்புக்குரிய பெருமையை பெற்றவரா குபேரன்? அதைப் பற்றி பார்ப்போம்.

நான்முகனின் மகன் புலஸ்திய முனிவருக்கு பிறந்தவர் விச்ரவசு. அவருக்கு இரண்டு மனைவிகள், அதில் மூத்த மனைவிக்குப் பிறந்த வர்தான் குபேரன். அப்போது அவரின் பெயர் வைஸ்ரவணன். இளையவளான கேகசிக்கு பிறந்தவர்கள் ராவணன், கும்பகர்ணன், விபீஷ ணன், சூர்ப்பனகை. ஆரம்பத்தில் இலங்கையை வைஸ்ரவணன் ஆண்டு வந்தார்.

ராவணன் தவம் இயற்றி வரங்கள் பல பெற்றதும், வைஸ்ரவணனைத் தோற்கடித்துவிட்டு, ஆட்சி யை அபகரித்துக்கொண்டான். நாடிழந்த வைஸ்ரவணன் ஒரு தவசியாக நாடுதோறும் அலைந்துகொண்டிருந்தார்.

அவருக்குத் திருமணம் செய்துவைக்க அவரின் தாய், தந்தையர் விரும்பினார்கள். அதன்படி பெண் தேடவும் தொடங்கினார்கள். ஆனால், எந்தப் பெண்ணையும் வைஸ்ரவணனுக்கு பிடிக்கவில்லை. பேரழகாகவும் குணவதியாகவும் இருக்கும் பெண்ணைத் தேடி நாடெங்கும் சுற்றிவரத் தொடங்கினார்.

சிவபெருமானின் மீது மாளாத பக்திகொண்ட குபேரன், சிவாலயம் தோறும் சென்று அழகிய பெண் வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். நாளடைவில், பல தலங் களில் தங்கியிருந்து தவம் இயற்றவும் செய்தார்.

இப்படி ஊர் ஊராகச் சுற்றிவரும் வேளையில், இறுதியாக காசி மாநகருக்கு வந்து சேர்ந்தார் வைஸ்ரவணன். அந்த நகரின் அமைதியையும் பெருமையையும் கண்ட அவர் அங்கேயே தங்கிவிட்டார். அதுமட்டுமா... `அகில உலகத்துக்கும் நாயகன்' எனப் பெயர் கொண்ட விஸ்வநாதரைக் கண்டதும் தனது வாழ்வின் அர்த்தமே விஸ்வநாதரை துதிப்பதுதான் என எண்ணிக்கொண்டார்.

பெண் தேடி வந்த நோக்கத்தைக்கூட மறந்து, சிவ தியானத்தில் மூழ்கிவிட்டார். ஒன்றா இரண்டா... எண்ணூறு ஆண்டுகளைக் கடந்த தவம் என்கிறது புராணம். அத்தனை ஆண்டுகளாக, எந்த நோக்கமும் இன்றி, பல

e-magazine
aanmeegamalar.com

இடையூறுகளைத் தாண்டி வைஸ்ரவணனின் தவம் தொடர்ந்தது. எதற்காகத் தவம் செய்கிறார் என்ற காரணமே தெரியாமல் தேவர்களும் குழம்பினர்.

ஆனாலும், அவருக்கு இடையூறு எதுவும் செய்யாமல்விட்டுவிட்டனர். காலம் செல்லச் செல்ல அவரின் தவத்தின் பயனாக எழுந்த அக்னிச் சூடு கயிலாயத்தையும் தொட்டது. பரம்பொருளான ஈசன், இனியும் தாமதிக்கக் கூடாது என வைஸ்ரவணனுக்கு அருள்புரியக் கிளம்பினார். அப்போது அன்னை உமாதேவி, தானும் அந்த எளிய பக்தனை, எந்த எதிர்பார்ப்பும் இல்லாத தவசியைக் காண விரும்புகிறேன் என்று கூறி சிவனோடு கிளம்பினார்.

கடும் தவம் இயற்றிய வைஸ்ரவணன் முன்பு தோன்றிய சிவனும் பார்வதியும் அவரை அன்பு கனிய அழைத்தனர். அம்மையப்பரின் குரல் கேட்டு தவத்தில் இருந்து விடுபட்டார். இழந்துபோன இலங்கைக்கு பதிலாக அவருக்கு அழகாபுரி பட்டணத்தையே சிவன் உருவாக்கித் தந்தார். உலகத்து நிதிகளை எல்லாம் அவரி டம் ஒப்படைத்து, அவரை `குபேரன்' என்ற பெயரோடு விளங்கச் செய்தார். வடக்கு திசைக்கு அவரை அதிபதியாக்கி, அஷ்ட திக் பாலகர்களில் ஒருவராக்கினார்.

செல்வத்தின் அதிபதியான திருமகளுக்கு துணையாக குபேரனை நியமித்தார் சிவன். சித்திரரேகை எனும் மங்கையை மணமுடித் துத் தந்து அவரை ஆசீர்வதித்தார். சிவபெரு மானுக்குப் பிரியமான நண்பனாக குபேரன் மாறினார். இதனால் `சிவசகா' என்ற பெயரையும் கொண்டார்.

எந்த எதிர்பார்ப்பும் இன்றி தவமியற்றி, சிவனை தரிசித்த காரணத்தால்தான் உலகத்து நிதிகளை எல்லாம் குபேரன் பெற்றார். தனக்கென ஒன்றையுமே எதிர்பாராத குபேரனின் தியாகச் செயலைப் போற்றியே அவர் தேவருலகின் நிதி அமைச்சர் பொறுப்பைப் பெற்றார். அது மட்டுமா? காக்கும் கடவுளான திருமாலின் அம்சமான வெங்கடாசலபதிக்கே கடனும் கொடுத்தார் குபேரன். எனவே, நியாயமான நேர்மையான எவ ருக்கும் நிச்சயம் உயரிய பொறுப்புகள் வந்தே தீரும். காலம் தாழ்ந்து நடைபெற்றாலும், கட்டாயம் தன்னலம் கருதாத பண்பாளர்களுக்கு சிறப்புகள் வந்தே சேரும் என்பதையே குபேரனின் கதை நமக்கு உணர்த்துகிறது.

– ஆன்மீக ஜோதிட ஆசான் மு.கிருஷ்ண மோகன் 8526223399

# சில பலன்களும் சில பரிகாரங்களும்

பூர்வீக இடத்தில் வசிக்க முடியாமல் போவது, பூர்வீக சொத்துக்களை அனுபவிக்க முடியாமல் இருப்பது, பூர்வீகத்தில் அவமானங்கள், சங்கடங்களை சந்திப்பது, பரம்பரை பரம்பரையாக தொடரும் வியாதி, கடன் போன்றவை இந்த தோஷத்தால் ஏற்படும்.

இந்த தோஷத்தை போக்க

- தினமும் வீட்டில் தீபம் ஏற்றி வழிபட வேண்டும்.
- குலதெய்வத்திற்கு விசேஷ அபிஷேக, ஆராதனை செய்து வழிபட வேண்டும்.
- பராமரிப்பு இல்லாத கோவில்களுக்கு திருப்பணி நடத்த வேண்டும்.

⊙ ⊙ ⊙

பசுவிற்கு பசும்புல், அகத்திக்கீரை, பழம் தந்தால் பிள்ளை வரம் கிடைக்கும்.

⊙ ⊙ ⊙

துளசிச் செடி நட்டாலோ அல்லது அதற்கு தண்ணீர் ஊற்றி வளர உதவி செய்தால், எத்தகைய பாவமும் நீங்கும்.

⊙ ⊙ ⊙

கோவில்களில் மலர்ச்செடிகள் நட்டு வைத்தால், வீட்டில் மங்கலம் பெருகும்.

⊙ ⊙ ⊙

ஆலயங்களைச் சுத்தம் செய்து கோலமிட்டால். ஆண்டவனின் அருள் கிடைக்கும்.

⊙ ⊙ ⊙

தொழு நோயாளிக்கு வயிராற விருந்து படைத்தால், கர்மம் அகலும்.

⊙ ⊙ ⊙

பசியோடு வருபவரை உபசரித்தால், மோட்சம் கிட்டும்.

⊙ ⊙ ⊙

தினசரி தியானம் செய்வதால், நிம்மதியும், ஞானமும் கூடிவரும்.

⊙ ⊙ ⊙

காக்கைக்கு காலையில் உணவிட்டால், பித்ருக்களால் நன்மை உண்டாகும்.

⊙ ⊙ ⊙

e-magazine
aanmeegamalar.com

# உலகின் அனைத்து நீர்நிலைகளில் நீராடினால் கிடைக்கும் பலனை தரும்

# மணிகர்ணிகா

e-magazine
aanmeegamalar.com






மகா பிரளயத்தின் போது எங்கும் முற்றிலும் அழிவு ஏற்பட்டது மற்றும் இருள் சூழ்ந்திருந்தது. எங்கும் திசை இல்லை, பேசவோ, அழவோ, கேட்கவோ யாரும் இல்லை.

அந்த நேரத்தில் எப்போதும் வியாபித்திருக்கும் பிரம்மம் இருந்தது மற்றும் எல்லாம் வல்ல சிவ பெருமான் சக்தி வடிவில் தேவியுடன் தன்னை வெளிப்படுத்தினார். சிவபெருமான் தன்னை புருஷன் என்றும், தேவியை சக்தி ரூபி ஸ்திரீ என்றும்

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





(ஆற்றலின் பெண்மை உருவகம்) அழைத்தார்.

நிலத்தைப் பொறுத்தவரை, பஞ்ச க்ரோஷ க்ஷேத்திரத்தைக் குறிக்கும் பகுதி மட்டுமே இருந்தது. (பஞ்ச க்ரோஷா என்றால் ஐந்து க்ரோஷா, மீண்டும் க்ரோஷா என்பது தூரத்தின் அளவீடு, இது தோராயமாக 2 மைல்களுக்கு சமம்). ஒரு நடுப் புள்ளியை எடுத்துக்கொண்டால், 10 மைல் சுற்றளவு பஞ்ச க்ரோஷ க்ஷேத்திரம்.


மிக மோசமான பிரளய காலத்திலும், சிவபெருமானும் பார்வதி தேவியும் இந்த பஞ்ச க்ரோஷ க்ஷேத்திரம் ஆன இடத்தை விட்டு வெளியேறவில்லை, எனவே இந்த இடம் அவிமுக்த க்ஷேத்திரம் என்று அழைக்கப்படுகிறது. க்ஷேத்திரத்தில் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று சிவபெருமான் விரும்பினார், மேலும் அந்த இடம் ஆனந்த கானன் (ஆனந்தவன்) என்று அழைக்கப்பட்டது.

சிவபெருமான் அவரது இடது பக்கம் மென்மையான மற்றும் அன்பான பார்வையை வீசினார், அங்கிருந்து ஒரு அழகான மனிதர் தோன்றினார். இவர் உத்தம புருஷர் என்று தகுதி பெற்றதால் புருஷோத்தமன் என்று அழைக்கப்பட்டார். சிவபெருமான் மகிழ்ச்சியடைந்து, புருஷோத்தமன் வேறு யாருமல்ல மகா விஷ்ணு என்று அறிவித்தார். சிவனும் விஷ்ணுவும் ஆனந்த வனத்திற்குள் நுழைந்தனர், அங்கு விஷ்ணு உடனடியாக தீவிர பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

விஷ்ணு தனது சுதர்சன சக்கரத்தால் ஒரு பெரிய குளத்தை தோண்டி அதை தனது தெய்வீக வியர்வையால் நிரப்பினார். இந்த குண்டம் சக்ரபுஷ்கரிணி தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. பகவான் விஷ்ணு தனது பிரார்த்தனையில் ஆழ்ந்தார். சிவபெருமான், மஹா விஷ்ணுவின் நேர்மையால் ஈர்க்கப்பட்டார். அவர் விஷ்ணுவை எழுந்து வந்து தெய்வீக வரம் கேட்கும்படி வேண்டினார். சிவபெருமான்



e-magazine
aanmeegamalar.com



மற்றும் பார்வதி தேவி இருவரும் தனது (விஷ்ணுவின்) பிரார்த்தனைகளை ஏற்க எப்போதும் இருக்க வேண்டும் என்று விஷ்ணு விரும்பினார். சிவபெருமானின் காதில் இருந்து நகை சக்ரபுஷ்கரிணி தீர்த்தத்தில் விழுந்தது, பின்னர் குளம் மணிகர்ணிகா (மணி என்றால் நகை என்றும் கர்ணிகா என்றால் காது என்றும் குறிப்பிடப்படுகிறது) என்று அழைக்கப்பட்டது.

மேலும், முழுப் பகுதியும் மிகுந்த பிரகாசத்துடன் தெய்வீக ஒளியால் ஜொலிப்பதாகவும், எனவே, இந்த க்ஷேத்திரம் "காசி" என்று அழைக்கப்படும் என்றும் விஷ்ணு கூறினார். (இப்போது கூட காசி ஒளி நகரம் என்று குறிப்பிடப்படுகிறது).

உலகெங்கிலும் உள்ள அனைத்து புனித தீர்த்தங்களிலும் நீராடி ஒரு பக்தனுக்கு கிடைக்கும் புண்ணியம், மணிகர்ணிகாவில் ஒருமுறை நீராடுவதால் அவருக்குக் கிடைக்கும் என்று காசி காண்டம் கூறுகிறது. ஆன்மீக ரீதியாக மணிகர்ணிகாவில் ஸ்நானம் செய்யும் ஒரு பக்தர் மோட்சத்தை அடைவார், அதில் எந்த சந்தேகமும் இல்லை.

பக்தியுடன் மணிகர்ணிகாவில் புனித நீராடி, தன் முன்னோர்களுக்கு திதி காரியங்கள் செய்து, இறைவனை வழிபடும் பக்தன் பல்வேறு யாகங்களைச் செய்த பலனைப் பெறுவான்.


விஷ்ணு பகவான் அத்தியாயம் 61 காசி காண்டத்தில் உள்ள பல்வேறு முக்கியமான தீர்த்தங்களை விவரிக்கிறார் அனைத்து புனித தீர்த்தங்களும் மணிகர்ணிகாவிற்கு மதிய நேரத்தில் குளிப்பதற்கு வருகின்றன. அனைத்து புனித தீர்த்தங்களும் பாவங்களை சுத்தப்படுத்தும் திறன் கொண்டவை என்றாலும், மணிகர்ணிகா தீர்த்தம் அனைத்திலும் முதலிடம் வகிக்கிறது. அந்த புனித தீர்த்தங்கள் அனைத்தும் மணிகர்ணிகா தீர்த்தத்தில் இருந்து பலம் பெறுகின்றன.

சிவபெருமானும் பார்வதி தேவியும் மணிகர்ணிகாவிற்கு மதியம் நீராடி வருகின்றனர். மகாவிஷ்ணுவே வைகுண்டத்திலிருந்து லட்சுமி தேவியுடன் மேற்கூறிய நேரத்தில் மணிகர்ணிகாவிற்கு நீராட வருகிறார். மகாவிஷ்ணுவின் கூற்றுப்படி, பிரம்மாவும் மேற்கண்ட நேரத்தில் மணிகர்ணிகாவை ஸ்நானத்திற்காக தரிசிக்கிறார். எனவே, மணிகர்ணிகாவில் மாத்யான்னிகா ஸ்நானம் (மதியம் ஸ்நானம்) மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது, இது தென்னிந்தியர்களால் நடத்தப்படும் காசி யாத்திரையின் ஒரு பகுதியாகும்.

மேற்கூறிய கடவுள்கள் மட்டுமல்ல, இந்திரன், மற்ற தேவர்கள் மற்றும் வாசுகி போன்ற பெரிய நாக ராஜாக்கள் (சர்ப்ப ராஜாக்கள்) போன்றவர்கள் தங்கள் புனித நீராடுவதற்காக மணிகர்ணிகாவிற்கு மதிய நேரத்தில் வருகை தருகின்றனர்.

மணிகர்ணிகாவில் ஒரு காயத்ரி மந்திரத்தை ஜபிக்கும் பக்தன் மற்ற இடங்களில் பத்தாயிரம் காயத்ரி மந்திரங்களை உச்சரித்த பலனைப் பெறுகிறான். மணிகர்ணிகாவில் ஒரு ஆஹுதியுடன் ஹோமம் செய்யும் பக்தன் வாழ்நாள் முழுவதும் அக்னிஹோத்ர ஹோமம் செய்த பலனைப் பெறுகிறான். (அக்னிஹோத்ர ஹோமம் மிகவும் கடினமான ஹோமம்.)

e-magazine
aanmeegamalar.com



மகாவிஷ்ணு மணிகர்ணிகா க்ஷேத்திரத்தின் எல்லையை விவரித்தார்: தெற்கில் இப்பகுதி கங்கா கேசவ் (தற்போது லலிதா காட்), வடக்கில் ஹரிச்சந்திர மண்டபம் (தோராயமாக சங்கட காட் அருகில்), கிழக்கே கங்கை நதி மற்றும் மேற்கில் ஸ்வர்க துவாரி (பிராமணாள்) வரை நீண்டுள்ளது. மகாவிஷ்ணுவின் கூற்றுப்படி, மணிகர்ணிகாவில் நீராடி மணிகர்ணிகேஸ்வரரை வழிபடும் பக்தர்கள் தாயின் கருவறையை மீண்டும் பார்க்க மாட்டார்கள் (அதாவது மறுபிறப்பு இருக்காது).

தற்போது மணிகர்ணிகா காட் நடைமுறையில் தகனம் செய்யும் இடமாக உள்ளது. இருப்பினும், ஒரு பக்தர் படகில் சற்று வடக்கு நோக்கி (பஞ்ச கங்கை நோக்கி) சென்றால், அவர் சக்ரபுஷ்கரிணி குண்டத்தை அடைவார்.

மணிகர்ணிகா பகுதி மிகப் பெரியதாக இருப்பதால், சக்ரபுஷ்கரிணி குண்டிற்கு அருகில் உள்ள நதியில் பக்தர்கள் நீராடுகின்றனர். சக்ரபுஷ்கரிணி குண்டத்துடன் பகவான் விஷ்ணுவின் தொடர்பைப் பற்றிய சுருக்கமான வரலாற்றைத் தரும் ஒரு கல்வெட்டு மேலே உள்ள குண்டிற்கு அருகில் உள்ளது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
170 e-books
aanmeegamalar.com
FREE
பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

e-magazine
aanmeegamalar.com

# ஈர வாடையை வைத்து கண்டுபிடிக்கப்பட்ட

# நம்பெருமாள்

e-magazine
aanmeegamalar.com

இந்த சரித்திரத்தை அறிய நாம் 640 ஆண்டுகள் பின்னே செல்ல வேண்டும். 1323ஆம் ஆண்டு பங்குனி உற்சவம் எட்டாம் திருநாள் முகலாய அரசன் உலுக் கான் திருவரங்கத்தின் மேல் படையெடுத்து 12,000 ஸ்ரீவைஷ்ணவர்களை வதம் செய் தான். முகலாய படையெடுப்பிலிருந்து அழ கிய மணவாளனை பாதுகாக்க பிள்ளை லோகாச் சாரியர் உற்சவரை தெற்கே எழுந்தருள செய்து திருவரங்கத்தை விட்டு வெளியேறினார்.

அதற்கு முன்பு மூலஸ்தானத்தில் பெரிய பெருமாளுக்கு கல் திரை சமர்ப்பித்து தாயார் வில்வ மரத்தின் கீழ் புதைத்து விட்டு சென்றார். இதே சமயத்தில் தான் தேசிகன் அந்த 12000 ஸ்ரீவைஷ்ணவர்களின் சடலங்களுன் இருந்து ஷருத்தபிரகாசிகை (பிரம்ம சூத்திரத்திற்க்கு விளக்கம் அருளிய சுவடி) மற்றும் பட்டரின் குழந்தைகளை காப்பாற்றி மைசூர் அருகே இருக்கும் சத்யகலத்திற்க்கு சென்று விட்டார்.

அழகிய மணவாளன் ஸ்ரீரங்கத்திலிருந்து கிளம்பி மதுரை வழியாக கேரளா சென்று பின்னர் மைசூர் வந்து திருமலைக்கு சென்றார். கடைசியாக செஞ்சிக்கோட்டைக்கு வந்து பின்னர் மீண்டும் திருவரங்கத்திற்க்கு வந்து சேர்ந்தார்.

1323ஆம் ஆண்டு பங்குனி மாதம் திருவரங்கத்தை விட்டு வெளியேறிய பெருமாள் 48 ஆண்டுகள் கழித்து மீண்டும் 1371–ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17ஆம் தேதி வந்தடைந்தார். (இதற்கு சான்று இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கல்வெட்டு)

கல்கல்வெட்டில் கூறப்படும் சக ஆண்டு 1293. சக ஆண்டிற்க்கும் நம் நாட்காட்டிக்கும் 78 ஆண்டுகள் வித்தியாசம். எனவே 1293+78 = 1371.

கொடவர் (பெருமாளை பல ஆண்டுகளாக பாதுகாத்தவர்) அழகிய மணவாளனுடன்







வந்தார். பெருமாளை மீண்டும் திருவரங்கம் எழுந்தருள செய்த முயற்சியில் கோபன்ன உடையார் பங்கு சிறந்தது.

இந்த 48 ஆண்டுகளுக்குள் அழகிய மணவாளன் உற்சவ மூர்த்தி என்ன ஆனார் என்று தெரியாததால் ஒரு புதிய உற்சவரை பிரதிஷ்டை செய்து விட்டனர். (எந்த ஆண்டு என்று குறிப்பு இல்லை).

48 ஆண்டுகள் கடந்து விட்டதாலும் அழகிய மணவாளனை, சேவித்த குடிமக்கள் இறந்து போய்விட்டதாலும், அதற்குப் பிறகு வந்தவர்கள் திருமேனியைச் சேவித்து அறியாதவர்களான தாலும், அழகிய மணவாளனைக் கோயிலில் எழுந்தருள மறுத்து விட்டனர்.

பழைய அழகிய மணவாள பெருமாளை சேவித்தவர் யாரும் எஞ்சி இல்லாததால் இரண்டு உற்சவர்களுள் எவர் முன்னால் இருந்த அழகிய மணவாளன் என்று சர்ச்சை எழுந்தது.

அப்போது மிக வயதான ஒருவர் தான் பழைய அழகிய மணவாளனை சேவித்தது உண்டு என்றும் ஆனால் அவருக்கு கண் பார்வை போய் விட்டது என்றும் கூறினார்.

அழகிய மணவாளனும் புதிதாக எழுந்தருளப்பட்ட உற்சவரும் காண்பதற்கும் உயரத்திலும் அங்க முத்திரைகளிலும் ஒரே போல் இருப்பர் என்பது வியப்பான ஒன்று.இந்த முதியவர் தன்னை ஒரு ஈரங்கொல்லி (வணத்தான்) கண் பார்வை இல்லாமையால், திருமேனி சேவிக்கவில்லை என்றாலும், அழகிய மணவாளன் சாற்றியிருந்த ஈரவாடை தீர்த்தம் (திருமஞ்சனம் போது சாற்றப்படும் வஸ்த்திரம்) சாப்பிட்டுக் கைங்கர்யம் பண்ணி பழகி இருப்பதைச் சொல்லி, அதன்மூலம் அழகிய மணவாளனைக் கண்டறிய முடியும் என்றார். அதன்படியே, அழகிய மணவாளன் திருமேனிக்கும், திருவரங்கமாளிகையார் திருமேனிக்கும், திருமஞ்சனம் செய்து, ஈரவாடை தீர்த்தம் சாதிக்குமாறு சொன்னார்.

அதனால் இரண்டு உற்சவ மூர்த்திகளுக்கும் திருமஞ்சனம் செய்து தமக்கு தீர்த்தம் தருமாறு வேண்டினார். ஊர் பெரியோர்களும் அவ்வாறே செய்தனர்.

அனுமன் சீதையை கண்ட பின்னர் "கண்டேன் சீதையை!!" என ராமரிடம் கூறியது போல் அழகிய மணவாளப் பெருமாள் ஈரவாடை தீர்த்தம் பெற்றதும் "கண்டேன் பெருமாளை" என்றும் "இவரே நம்பெருமாள்" என்றும் கூறினார்.

அன்று முதல் அழகிய மணவாளன் என்ற திருநாமத்தை விட நம்பெருமாள் என்ற திருநாமமே பிரசித்தம் ஆனது. புதிதாக வந்த உற்சவருக்கு "திருவரங்க மாளிகையார் " என்று திருநாமம் ஏற்பட்டது. பின்னர் அந்த ஸ்ரீவைஷ்ணவ வன்னாத்தனுக்கு மரியாதை சமர்ப்பிக்கப்பட்டது.

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
**சந்தா**

## UPI மற்றும் வங்கி வாயிலாகவும் சந்தா செலுத்துங்கள்...

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மிக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

e-magazine
aanmeegamalar.com

# புத்தர் பெற்ற ஞானம் என்ன?



அழகான மனைவியை விட்டும் அன்பான தந்தையை விட்டும் அருமை குழந்தையை விட்டும் அரண்மனை சுகபோகங்கள் அனைத்தையும் விட்டும் புத்த பெருமான் எதற்காக காடு சென்றார்? அங்கு சென்று அவர் பெற்றது என்ன? அதனால் மனித குலம் அடைந்தது என்ன? என்பவைகள் உலக முழுவதும் உள்ள எல்லா தரப்பு மக்களும் அறிந்தவைகளே புத்தரை அன்பு வடிவாக அறத்தின் தெய்வமாக ஏற்றுகொள்ளாத எவருமே மண்ணில் கிடையாது. அப்படி யாரவது ஒருவர் இருந்தால் அவரை இவர் மனிதர்தானா என்று சந்தேகப்பட வேண்டிய நிலை அன்றும் இன்றும் என்றும் இருந்து கொண்டே இருக்கிறது.

காட்டுக்கு சென்ற புத்தர் வைதீக நெறியில் உள்ள ஞானிகளை சந்தித்தார் ஜைன தர்மத்தின் குறிக்கோளை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுங்கு மாறாது வாழ்ந்த துறவிகள் பலரையும் சந்தித்தார். ஆசீவதம் என்ற மிக தீவிரமான அஹிம்சை நெறியில் பற்றுகொண்ட முனிவர்கள் பலரையும் சந்தித்தார் இவர்கள் யாரிடத்திலும் புத்தரின் அறிவுபூர்வமான தேடுதலுக்கு விடை கிடைக்கவில்லை. சுமார் பதினான்கு ஆண்டுகள் தாகத்தோடு அலைகின்ற பாலைவன பயணி போல தனது ஞான பசிக்கு உணவு தேடி காடுகள் மலைகள் சமவெளிகள் நாடு நகரங்கள் என்று அலைந்தார் எங்குமே அவர் தேடியது கிடைக்கவில்லை கடேசியில் தான் தேடுவது வெளியில் கிடைக்காது. காரணம் அது வெளியில் இல்லை என்ற முடிவிற்கு வந்து போதி மரத்தடியில் கண்களை மூடி தனக்குள் ஆழ்ந்தார். அப்படி ஆழ்ந்த போது ஆயிரம் ஆயிரம் வருடமாக பல ஞானிகளும் தவ சிரேஷ்டர்களும் அனுபவத்தால் கண்ட ஆசையை விடு பற்றை அறு அதுவே துன்பத்தின் நிவாரண மார்க்கம் என்ற தெளிவை கண்டறிந்தார். அன்றுமுதல் அவர் ஆசிய ஜோதியாக நாடு முழுவதும் தெரியபட்டார்.

புத்தரின் வாழ்க்கை வரலாற்றை லலிதா விஸ்தரம் அஷ்வகோசரின் புத்த சரிதம், சௌந்தர நந்தம் போன்ற வடமொழி நூல்களின் அறிய முடிகிறது. புத்தரின் நேரடி சீடர்களான சாரி புத்தர், மௌத்த கல்யானர், காசியபர், ஆனந்தர் ஆகியோர்கள் மக்களுக்கு வழங்கிய ஞான உபதேசத்தில் மிக தெளிவாகவும் உறுதியாகவும் புத்தர் வாழ்க்கையையும் அமுத வாக்கையும் தெரியபடுத்தி உள்ளனர். அக்காலத்தில் மகத பேரரசின் குடிமக்கள் பேசிய பாலி மொழிலேயே

புத்தரும் பேசினார் அவரின் அற்புதமான கருத்துக்களும் அந்த மொழியிலேயே பதிவு செய்ய பட்டும் இருக்கிறது.

முதல் முதலில் பீகார் மாநிலத்தில் உள்ள நாலந்தா அருகில் ராஜகிருகம் என்ற பிந்துசார மன்னனின் தலைநகரத்தில் ஒரு அறிஞர்கள் சபை கூடியது. அஜாத சத்துருவின் தந்தையான பிந்துசாரன் புத்தர் நிர்வாணம் அடைந்த சில வருடத்தில் மகா காசியபர் தலைமையில் புத்த துறவிகளை கூட்டி அவரது உபதேசங்களை அதிகாரபூர்வமாக தொகுத்தார். அதன் பிறகு சில நூற்றாண்டுகள் கழித்து வைஷாலி நகரத்தில் சர்வ காம மகாதேரர் தலைமையில் சுமார் எழுநூரு பிட்சுகள் அமர்ந்து ஆராய்ந்து இன்று மிக புகழ்பெற்றதாக திகழும் திரிபிடகங்களை தொகுத்து வழங்கு கின்றார்கள் மூன்றாவது முறையாக மாமன்னன் சாம்ராட் அசோகன் புத்தமதத்தை ஏற்று நாடு முழுவதும் பிரச்சாரத்தை துவங்கிய காலத்தில் மொக்கலிபுத்த திஸ்ஸ என்ற துறவியின் தலைமையை கொண்டு ஆயிரம் பிட்சுகள் கூடி அபிதம்ப பிடகம் என்ற அற்புத கருத்து செறிவை தொகுத்து வழங்கினார்கள்.



அன்றுமுதல் இந்த திரிபிடகம் என்பது புத்த மதத்தில் பிட்சுகள் என்ற துறவிகள் வேதங்களை வாயால் சொல்ல காதுகளால் கேட்டு மனதில் பதிய வைப்பது போல பரம்பரை பரம்பரையாக அழியாமல் பாதுகாத்து வந்தனர். கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஸ்ரீலங்காவில் உள்ள ஆலுவேன் என்ற இடத்தில் வட்டகாமினி என்ற அரசன் ஆதரவின் இதுவரை வாய்மொழியாக மட்டுமே இருந்த திரிபீடகங்களை எழுத்து வடிவங்களாக ஆக்கினார்கள் இது தான் இன்று கிடைக்கும் திரிபிடகத்தின் மூல நூலாகும்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

இதன் பிறகு இரண்டாம் நூற்றாண்டில் துவங்கி ஆறாம் நூற்றாண்டு வரை சீன மொழியிலும் மங்கோலிய மொழியிலும் திபத்திய மொழியிலும் திரிபிடங்கள் எழுதப்பட்டன.

பொதுவாக புத்தமதம் என்றவுடன் அதில் பிரிவுகள் இல்லை உலக முழுவதுமே ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது என்று நம்மில் பலர் நினைத்து வருகிறோம். இந்த எண்ணம் மிகவும் தவறு காரணம் புத்த மதம் எந்த மண்ணில் தோன்றியதோ அதே இந்திய மண்ணில் இரண்டு பிரிவுகளாக பிரிந்தது. கி.பி. முதலாம் நூற்றாண்டில் பௌத்தம் மாகாயானம் என்றும் ஹீனயானம் என்றும் இரண்டாக அதாவது இரண்டு தத்துவ கோட்பாடுகளாக பிரிந்தது. மாகாயானம் என்றால் பெரிய வழி என்று அர்த்தம். ஹீனயானம் என்றால் சிறிய வழி என்பது



e-magazine
aanmeegamalar.com

பொருளாகும் மகாயான மரபு சார்ந்த நூல்கள் அனைத்துமே சம்ஸ்கிருத மொழியில் இருக்கிறது. ஹீனயான நூல்கள் புத்தர் பேசிய பாலி மொழியிலேயே இன்றும் இருக்கிறது. இது தவிர நாகார்ஜுனர் என்ற மாபெரும் தத்துவ ஞானி மாத்யமிக வாதம் என்ற ஒரு பிரிவை தோற்றுவித்தார். நாங்காவது நூற்றாண்டில் வாழ்ந்த அசகர், வசுபந்து ஆகிய சகோதர ஞானிகள் விஞ்ஞான வாதம் என்ற ஒரு புதிய பிரிவை உருவாக்கினார்கள்.




இது தவிர கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த போதி தர்மர் என்ற அரச வம்சத்து துறவி ஒருவர் சீன நாட்டிற்கு சென்று புத்த தத்துவங்களோடு தியான மார்க்கத்தையும் கலந்து மக்களுக்கு உபதேசம் செய்தார். அந்த மதபிரிவே இன்று சீனாவிலும் ஜப்பானிலும் புகழ்பெற்ற ஜென்மார்க்கமாக வளர்ந்து வருகிறது. புத்த தர்மத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு யுவான் சுவாங், நாலந்தா பல்கலைகழகத்தில் கல்வி பயின்ற போது அதன் தலைவராக



வடமொழியில் உள்ள நூல்கள் இது தவிர பாலி மொழியில் விஷுத்தி மங்கள், மிலிந்த பண்ஹா என்ற நூல்கள் உள்ளன. இவைகளும் வடமொழி நூலுக்கு இணையான பொருள்களை தன்னுள்ளே கொண்டுள்ளன.

இந்துமத உபநிசதங்களின் கருத்துக்கள் பிற்காலத்தில் அத்வைதம், துவைதம், விசிஷ் டாத்வைதம் என்று மூன்று தத்துவ பிரிவுகளாக ஆனது போலவே புத்தரின் உபதேசங்களும் அவர் காலத்திற்கு பிறகு சௌந்திராத்திகம், வைபாஷிகம், மாத்தியமிகம், யோகாசாரம் என்ற நான்கு பிரிவுகளாக உருவானது.

பாலி மொழியில் உள்ள திரிபீடகங்களுக்கு முதல் மரியாதை கொடுப்பவர்கள் சௌந்தி ராத்திகர் அபிதர்ம பிடகத்திற்கு மரியாதை கொடுப்பவர்கள் வைபாஷிகர் நாகார்ஜுனரின் தத்துவங்களை ஏற்று மாகாயான பிரிவாக செயல்படுபவர்கள் மாத்யமிகர், அசகர், வசுபந்து போன்றோரின் தத்துவங்களை ஏற்றுகொடவர்கள் யோகசாரர். இவர்களை விஞ்ஞான வாதியர், சூன்ய வாதியர் என்றும் அழைப்பார்கள் இந்த நான்கு பிரிவுகளில் தத்துவங்களை அறிந்து கொள்ள தமிழில் உள்ள சிவஞான சித்தியார் பரபக்கத்தை படித்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

புத்தமத தத்துவம் என்பது மிகவும் சிக்க லானது புரிந்துகொள்ள கடினமாக இருப்பது எனவே தத்துவத்திற்குள் நேரடியாக செல்வதற்கு முன்னால் இந்த முன்னோட்டத்தை சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது காரணம் அப்போது தான் புத்த தத்துவத்தின் கனம் என்னவென்று தெரியும் இனி புத்தர் சொன்ன தத்துவங்களை சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434



ஆன்மிகமலர்.காம் காலண்டர்
சுபநிகழ்வை அறிய ஒவ்வொரு வீடுகளில் அவசியம் இருக்கவேண்டிய 2024 காலண்டர் (இரண்டுவகை)
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்



மேலும் தகவலுக்கு: 9994162182 / 9994323622 9444228203

ஆன்மிகமலர்
மெயில் புக்



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க









## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்











e-magazine

aanmeegamalar.com

# ஆன்மீக வழியில் அமைதி

நம்மிடமிருந்து ஒரு செயல்பாடு உருவானால் அல்லது உருவாக்கப்பட்டால் நம் வாழ்வில் ஒரு விளைவு ஏற்படும். அதாவது நமது மனம், வாக்கு, செயல் போன்றவற்றுக்குத் தக்க ஒரு விளைவை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அந்த விளைவின் காரணமாக நமது புண்ணிய பாவ கர்மப்பலன்கள் ஏற்படும். அவை திருஷ்டப் பலன், அதிருஷ்டப் பலன் என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. நமது கண்ணுக்கு முன்பாக விளையும் புண்ணிய பாவ கர்மப் பலன்களுக்கு திருஷ்ட பலன் என்றும், நமது கண்களுக்குத் தெரியாமல் நமக்கு விளையும் புண்ணிய பாவ கர்மப்பலன்களை அதிர்ஷ்டப் பலன் என்றும் சாஸ்திரம் கூறுகிறது.

அதிர்ஷ்டப் பலன்கள் பாவம் புண்ணியம் என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக நாம் ஒருவருக்கு தவறான உள்நோக்கத்துடன் பணத்தைக் கொடுத்தால், அந்த செயல் அதிர்ஷ்டப் பலன்களில் அது பாவத்தின் கர்ம பலனைச் சேரும். நாம் ஒருவருக்கு நன்மை கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பணத்தை மற்றவருக்கு கொடுத்தால், அந்த செயல் அதிர்ஷ்டப் பலன்களில் அது புண்ணியத்தின் கர்ம பலனைச் சேரும். நம்மிடமுள்ள ஒவ்வொரு கர்மத்திற்கும் அதாவது நமது ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் பாவ புண்ணிய கர்ம பலன்கள் உண்டாகும்.

அதாவது நம்முடைய எண்ணங்கள், செயல்பாடுகளுக்குத் தகுந்தவாறு கர்ம புண்ணிய பாவப்பலன்கள் உண்டு என்று சாஸ்திரம் கூறுகிறது. நாம் ஏதாவது ஒரு செயல் செய்தால், அதற்குத்தக்க ஏதாவது ஒரு விளைவு இருக்கும். அதாவது நமது செயல்பாட்டிற்குத் தக்க விளைவுகள் ஏற்படும். எடுத்துக்காட்டாக நாம் ஓரிடத்தை நோக்கி நடந்து சென்றால் ஒரு குறிப்பிட்ட தூரத்தை அல்லது ஒரு இடத்தை அடைந்து விடுவோம். நாம் ஒரு இடத்தை நோக்கி ஓடினால் தூரத்தை அல்லது அந்த இடத்தை விரைவாக அடைந்து விடுவோம்.

நமது வினைக்கு ஏற்றவாறு விளைவுகளை சந்திக்க நேரிடும். அப்படிப்பட்ட விளைவுகள் நல்லவையாகவோ தீயவையாகவோ இருக்கலாம். நமது எண்ணங்களால், செயல்பாடுகளால் வரக்கூடியவைகளுக்கு ஏதோவொரு விளைவு ஏற்படும். இது அனைவருக்கும் நிகழக்கூடிய தவிர்க்க முடியாத ஒரு உலக நியதியாகும். நமது எண்ணங்கள்

74

செயல்பாடுகள் எல்லாம் நல்லவையாக இருந்தால் புண்ணிய கர்மா பலனையும், அவை தீயவையாக இருக்கும்பட்சத்தில் பாவ கர்மா பலனையும் அனுபவவிக்க நேரிடும் என்று கர்ம தத்துவம் கூறுகிறது.

எடுத்துக்காட்டாக ஒரு மருத்துவர் நோயாளியை அறுவைச்சிகிச்சையின் மூலம் பிழைக்க வைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் மிகவும் கவனமாக சிகிச்சை செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறு அவர் சிகிச்சை மேற்கொண்டும் அந்த நோயாளி இறந்து விட்டார் என்றால் அந்த மருத்துவருக்குரிய புண்ணிய கர்மப் பலன்கள் அவரையும் அறியாமல் அவரிடம் வந்து சேர்ந்து விடும். இதனை அதிருஷ்ட புண்ணிய கர்மப் பலன் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதற்கு மாறாக அந்த மருத்துவர் பணம் கிடைக்கும் என்ற நோக்கில் அல்லது ஆசையில் நோயாளியை அலட்சியமாக அறுவைச்சிகிச்சை செய்து இறக்கும்படி செய்தால் அவருக்கு அவரையும் அறியாமல் பாவ கர்மப்பலன்கள் அவரிடம் வந்து சேர்ந்து விடும்.

எனவே ஒரு மனிதனுடைய செயல்பாட்டில் உள்நோக்கம் நல்லவையாக இருந்தால் புண்ணிய கர்மப் பலனையும், தவறான அல்லது தீமை தரக்கூடியவையாக இருக்கும்பட்சத்தில் அது பாவ கர்மப் பலனையும் அவனுக்குக் கொடுக்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. இதிலிருந்து மனிதனுடைய மனம், வாக்கு, செயல் மூன்றிலும் அவனுடைய உள்நோக்கம் நல்லவையாக மட்டும் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அவன் புண்ணிய கர்மப் பலனைப் பெறுவதோடு அவன் விரும்பும் தேடும் மன அமைதியும் கிடைக்கும்.

பொதுவாக நமது புண்ணிய கர்மப்பலன்கள் எல்லாம் வாழ்வில் மகிழ்ச்சியாகவும் சுகமாகவும் வாழ்வது மூலம் தீரும் என்று கர்ம தத்துவத்தில் கூறப்படுகிறது. அதேபோல் நமது பாவ கர்மப்பலன்கள் நாம் வாழும் வாழ்வில் துன்பங்கள் துயரங்களை அனுபவவிப்பதன் மூலம் அல்லது வெளிப்படுத்துவதன் மூலம் தீரும். அதாவது அதிர்ஷ்டப் பலன் மூலம் நமது அனுபவத்தில் சுகம், இன்பம் போன்ற அனுபவங்களை வெளிப்படுத்தி அதன் மூலம் நாம் செய்த புண்ணிய கர்ம பலன்கள் தீரும்.

அதேபோல் அதிர்ஷ்டப் பலன் மூலம் கர்ம பாவ பலன்கள் என்பது



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்




நமது அனுபவத்தில் மனதளவில், உடலளவில் துன்பங்களை வெளிப்படுத்தி அதன் மூலம் நமது பாவ கர்ம பலன்கள் தீரும். இதிலிருந்து அதிர்ஷ்டப்பலன் பாவம், புண்ணியம் துன்பம் துயரம் போன்றவற்றை அனுபவவிப்பதன் மூலம் தீரும் என்று சாஸ்திரம் கூறுகிறது. இதிலிருந்து நம் எண்ணங்கள், செயல்பாடுகளின் அடிப்படையில் நமது அதிர்ஷ்டப் பாவ புண்ணிய கர்மப் பலன்கள் வரப்பெற்று, நாம் அவற்றை இன்பத்துடன் அல்லது துன்பத்துடன் அனுபவவித்து வாழ்வதன் மூலம் தீரும். மனிதனுடைய பாவ புண்ணிய கர்ம பலன்கள் இன்பம், துன்பம் போன்றவற்றை மனதளவில் உடலளவில் அனுபவவிப்பதன் மூலம் தீரும்.

அவ்வாறு நமது பாவ புண்ணிய கர்மப் பலன்கள் தீரும் என்றால், அவை எப்போது எந்தக் காலத்தில் நமது பாவ புண்ணிய கர்மாக்களை வெளிப்படுத்தித் தீரும்? என்று நமது மனதில் தோன்றும். மனிதர்கள் விதவிதமான பாவங்களையோ புண்ணியங்களையோ தன்னுடைய கர்மாக்களின் மூலம் சேர்த்து வைத்திருக்கிறான். அவையெல்லாம் அந்தக்கரணமாக நமது காரண சரீரத்தில்

e-magazine
aanmeegamalar.com

பதிவாகியுள்ளது. இதிலிருந்து ஒவ்வொரு ஜீவன்களிடத்திலும் பாவங்கள் புண்ணியங்கள் இருக்கின்றன என்பதை புரிந்து கொள்ளலாம். அவையெல்லாம் நமது காரண சரீரத்தில் நம்மையும் அறியாமல் ஏற்கனவே பதிவு பெற்றுள்ளது. மனிதர்கள் அறிந்தும் அறியாமல் பல்வேறு பாவங்கள் புண்ணியங்கள் செய்திருப்பதால், பூமியில் மீண்டும் ஜெனனம் எடுத்து இருக்கிறான். அதேபோல் மனிதன் பல்வேறு புண்ணியங்கள் அறிந்தும் அறியாமல் செய்திருந்தாலும் மீண்டும் இப்பூமியில் பிறக்கிறான். மனிதன் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்றவாறு அவன் பிறவி அமையும் என்று சாஸ்திரம் கூறுகிறது.



நாம் செய்யக்கூடிய பாவம் புண்ணியங்கள் அந்தக்கரணமாக நமது காரண சரீரத்தில் பதிவாகியுள்ளது. ஒரு மனிதனிடம் பாவ புண்ணியங்கள் இருக்கின்றன என்பதையும் அவற்றை அவன் அனுபவவிக்கும் இன்ப துன்பங்களை வைத்து புரிந்து கொள்ளலாம். உலகில் காணும் ஜீவன்களில் மனித ஜன்மத்தில்தான் இந்த பாவ புண்ணிய கர்மாக்கள் செய்யவும், அவற்றை அவன் வாழ்வில் அனுபவவிப்பதன் மூலம் தீர்க்கவும் முடியும். அதாவது மனித ஜன்மத்தில்தான் அவன் பாவ புண்ணிய கர்ம பலன்களை சேர்ப்பதற்கும், அவற்றைத் தீர்ப்பதற்கும் வாய்ப்பினை இறைவன் நமக்கு கொடுத்திருக்கிறான். மனித ஜென்மத்தைத் தவிர மற்ற உயிரினங்களுக்கு பாவ புண்ணிய கர்மாக்களை சேர்ப்பதற்கும் அவற்றைத் தீர்ப்பதற்கும் அத்தகையதொரு வாய்ப்புகள் இல்லை.

ஒரு மனிதன் இறந்து விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனது அடுத்த ஜன்மம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்றால் அவன் செய்த குறிப்பிட்ட ஒரு புண்ணிய கர்மப் பலன்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட பாவ கர்மப் பலன்களின் அடிப்படையில் மறு ஜென்மம் ஏற்படுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதனுடைய மனம், வாக்கு மற்றும் செயல் போன்றவற்றின் மூலம் புண்ணிய கர்மங்கள் அதிகமாக இருக்கும்பட்சத்தில் அவனுக்கு தேவ சரீரம் ஏற்படுகிறது. அதன் மூலம் அவன் புண்ணிய கர்ம பலன்களின் சுகத்தை அனுபவவிக்கும்படி செய்கிறது. அதேபோன்று அவனுடைய மனம், வாக்கு, செயல் போன்றவற்றின் மூலம் பாவ கர்மாக்கள் அதிகமாக இருக்கும்பட்சத்தில் மிருகம், மரம், செடி கொடி, தாவரங்கள் போன்ற சரீரங்களாகக் கிடைக்கின்றன.

மனிதனைத் தவிர மற்ற உயிரினங்களுக்கு இந்திரியங்கள் குறைவு. அதனால் அவைகளுக்கு சுகங்கள் துக்கங்களும் மிகவும் குறைவு. அதாவது ஒரு ஜீவனுக்கு இந்திரியங்கள் அதிகரிக்க அதிகரிக்க சுகமும், இந்திரியங்கள் குறைய குறைய துக்கம் துயரம் போன்றவற்றை அனுபவிக்க நேரிடும். எடுத்துக்காட்டாக ஒருவனுக்கு கண்கள் என்ற ஒரு இந்திரியம் இல்லையென வைத்துக் கொள்வோம். அவன் பார்வையில்லாமல் இந்த உலகத்தில் துயரங்களை அதிகமாக சந்திக்க நேரிடும்.

ஒரு ஜீவனுக்கு புண்ணிய பாவ கர்மாக்கள் சமநிலையில் இருக்கும்பட்சத்தில் அந்த ஜீவனுக்கு மனிதப்பிறவி கிடைக்கிறது. இந்த உலகத்தில் மனிதர்களில் சிலர் சுகமாகவும், சிலர் துன்பம் துயரங்களில் இருப்பதையெல்லாம் நாம் பார்க்கிறோம். அத்தகைய ஜீவன்களுக்கு பாவ புண்ணிய கர்மாக்கள் சம அளவில் இருந்து, அதன் காரணமாக மனித ஜன்மம் கிடைத்திருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

e-magazine
aanmeegamalar.com

## கட்டாய சந்தா இல்லை!

## சப்ஸ்கிரைப் இல்லை!!

## மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் **175** இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# நொய்டா கோவில்களில் சனிப்பெயர்ச்சி







சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு செக்டார் 62, ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் பரிகார பூஜை, சகஸ்ரநாம அர்ச்சனை மற்றும் அபிஷேகம் செய்யப்பட்டது.

கலச ஸ்தாபனம், ஜெபம், சிறப்பு அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனையுடன் நிகழ்ச்சி துவங்கியது. மகா தீபாராதனையுடன், பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. சிறப்பு அபிஷேகத்திற்கு பின், சனி பகவானுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. எழுபதுக்கும் மேற்பட்ட பக்தர்கள் பல்வேறு பூஜைகளில் கலந்து கொண்டனர்.

இதேபோல், செக்டார் 22ல் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவிலில், பரிகார ஹோமத்துடன் நிகழ்ச்சி தொடங்கி, சனீஸ்வர பகவானுக்கு அபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, மகா தீபாராதனையுடன் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பக்தர் களுக்கு சேவை செய்து வரும் வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் இந்த இரண்டு கோவில்களையும் நிர்வாகித்து வருகிறது.

e-magazine
aanmeegamalar.com




# 29வது ஐயப்ப பூஜை, கிழக்கு டெல்லியில் நடை பெற்றது









வசுந்தரா என்கிளேவ், தர்ம சாஸ்தா சேவா சமிதியின் 29வது ஆண்டு ஐயப்ப பூஜை, வசுந்தரா என்கிளேவ் ஸ்ரீ சங்கடஹர கணபதி கோவில், கிழக்கு டெல்லியில் நடந்தது. கோவிலுக்குள் அனைத்து சடங்குகளும், கோவிலுக்கு வெளியே பக்தி பாடல்கள் போன்ற கலாச்சார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த காலத்தைப் போலவே, சமிதி கேரளாவிலிருந்து புகழ்பெற்ற பஜனைக் குழுக்கள் அழைத்து வந்தது. இந்நிகழ்ச்சியில் குருவாயூர் ஸ்ரீ பிரம்மம் பஜனை, பிஜு பாலா தலைமையில் சம்பிரதாய பஜனை நடந்தது.

கூடுதலாக, சமிதி அதன் பரோபகார நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, நிகழ்ச்சியின் போது கிட்டத்தட்ட 800 பேருக்கு மஹா பிரசாதம் விநியோகபப்பட்டது. பொதுச்செயலாளர் வி.வி.சுதாகரன் மற்றும் தலைவர் சுரேஷ் நாயர் தலைமையில் 30க்கும் மேற்பட்ட தேர்தல் ஆணைய உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டது. டிஎஸ்எஸ் தலைவர் சுரேஷ் நாயருடன், செயலாளர் வி.வி. சுதாகர், பொருளாளர் சுரேஷ்குமார், டிஎம்ஏ டெல்லி தலைவர் ரகுநாத், அகில இந்திய மலையாளி சங்கத் தலைவர் பாபு பணிக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் எம்எல்ஏ வினோத்குமார் பின்னி பூஜையில் தீவிரமாக பங்கேற்றார். பாஜகவின் டெல்லி பிரதேச தலைவர் வீரேந்திர சச்தேவா, துணைத் தலைவர் விஷ்ணு மிட்டல், பகுதி கவுன்சிலர் முனிஷ் தேதா மற்றும் பிற கட்சி தொண்டர்களும் கொண்டாட்டத்தில் பங்கேற்றனர்.


எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

e-magazine
aanmeegamalar.com

# ஹரிவராசனம் உருவான வரலாறு



கார்த்திகை பிறந்தாலே சபரிமலை ஐயப்பன் தான் நினைவுக்கு வருவார், அதுபோல ஐயப்பன் என்றாலே ஹரிவராசனம் பாடல்தான் நம் மனம் பாடத் துவங்கும்.

சபரிமலையில் ஐயப்ப சாமியை உறங்க வைக்கும் ஹரிவராசனம் விஸ்வமோகனம்... எனும் உறக்கப்பாட்டு அத்தாழப்பூஜை முடிந்த பின் நடைசாத்தும் பாடலாக ஒலிக்கும். இந்த ஹரிவராசனம் பாடலை தாலாட்டாக பாடுவதாகவும், இதனால் ஐயப்பன் நிம்மதியாக துயில் கொள்வதாகவும் ஐதீகம்.

இவ்வளவு சிறப்பு பெற்ற அந்த ஹரிவராசனம் பாடல் உருவான கதையைப் பற்றி பார்ப்போம்.

இந்த பாடலை இயற்றியவர் தமிழகத்தை சார்ந்த கம்பங்குடி ஸ்ரீ குளத்து ஐயர், இவர் 1920 ஆம் வருடம் இந்த பாடலை இயற்றினார்.

இவர் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைகுறிச்சி எனும் ஊரில் பிறந்தவர் ஆவார். கம்பங்குடி சுந்தரம் குளத்து அய்யர் பிரசுரித்த சாஸ்தா ஸ்துதி கதம்பம் என்ற புத்தகத்தில் உள்ளது இந்த ஹரிவராசனம் கீர்த்தனம்.

இவர் ஹரிவராசனம் பாடலை ஐயப்பசாமியை தரிசிக்கும்போது எழுதினார்.. ஒவ்வொரு வரிகளும் அய்யப்ப சாமியே அருளியதுபோல இருந்ததாக அவர் கூறியுள்ளார்.

கம்பங்குடி என்பது இவரது வம்சாவழி பட்டப்பெயராகும், இவரது முன்னோர்கள் மிகவும் கஷ்டபட்டாலும் இவர்களது வீட்டின் வழியாக போவோர் வருவோர்க்கும் இல்லாதவர்களுக்கு உணவளித்து வரும் பழக்கத்தை கடைபிடித்து வந்தனர்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்



e-magazine
aanmeegamalar.com

அந்த குடும்பத்தைபற்றி சோதிப்பதற்காக ஐயப்பன் இவர்களிடம் உணவு கேட்டுள்ளார்.

உனவு ஏதும் இல்லாததால் வீட்டில் இருந்த கம்பு தானியத்தை கூழாக செய்து உண வளித்தனர். அதனாலதான் அவர் களது குடும்பம் கம்பங்குடி என்ற பட்டப்பெயர் அமைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பூர்விகமான குடும்பத்தில் பிறந்தவர் தான் ஹரிவராசனம் பாடலை இயற்றிய கம்பங்குடி ஐயர்

இந்தப் பாடல் வழக்கத்திற்கு வருவதற்கு முன், சபரிமலையில் மேல் சாந்தியாக இருந்த செங்னன்னூர் கிட்டுமணி திருமேனி (நம்பூதிரி) புல்லாங் குழல் வாசித்து நடை சார்த்துவது நடப்பில் இருந்தது.

1950–களில் சபரிமலை ஐயப்பன் கோவில் தீக்கு இரையாகி (ஒருசில சுயநலவாதிகளின் இந்து மத வெறுப்பின் காரணமாக ஏற்பட்ட தீ) பின் தேவபிரசன்னம் பார்க்கப்பட்டு சபரிமலை கோவிலை மீண்டும் 1951 புணரமைத்தனர்.

அப்போது கோவில் மேல்சாந்தியாக இருந்த ஈஸ்வரன் நம்பூதிரி ஹரிவரசனம் கீர்த்தனம் இரவு அத்தாழப்பூஜையில் அய்யப்பசாமி முன் நின்று ஸ்லோகம் போன்று சொல்வதை மாற்றினார். இது அய்யப்ப சாமியை உறங்கவைக்கும் பாடல்போல உள்ளதாக கருதி

அத்தாழபூஜை (இரவு பூஜை) முடிந்து நடை சாத்தும் பாடலாக மற்றினார்.

மேல்சாந்தியாக இருந்த ஈஸ்வரன் நம்பூதிரி, கோவில் ஊழியர்களும் ஹரிவராஸனம் பாட ஆரம்பித்த வழக்கம், ஏசுதாஸின் இனிய குரலில் இந்தப் பாடல் வெளிவந்த பிறகு அந்த இசைத்தட்டை இசைப்பதாக மாறியது. அப்புறம் ஒலிப்பேழை. இந்தப் பாடலை மூன்று விதமான இசையமைப்பில் பாட அறிந்தவன் நான்."

கே ஜே யேசுதாஸ் 1975 ஆம் ஆண்டு தமிழ் மலையாளம் மொழிகளில் வெளிவந்த சுவாமி அய்யப்பன்"திரைப்படத்தில் முதன் முறையாக இந்தபாடலை பாடினார் அதற்கு தேவராஜன் என்பவர் இசையமைத்தார்.

அந்த மெட்டில் அமைந்த ஹரிவரசனம் பாடல்தான் இன்று வரை சுமார் 35 வருடங்களாகசபரிமலையில் நடைசாத்தும் பாடலாக ஒலிக்கிறது.



# நரசிம்மரும், சுவாதி நட்சத்திரமும்

நரசிம்மரை வழிபட்டால் பரமேஸ்வரன்பார்வதியை வழிபட்டது போன்ற உயர்ந்த பலன் கிடைக்கிறது.

சுவாதி நட்சத்திரம் வாயுவின் நட்சத்திரம். வாயுதேவர் எவ்வளவு வேகத்தில் வருகிறாரோ அதே வாயுவேகத்தில் வந்து நம்மைப் பாதுகாத்து அருள் புரிவார் இந்த நரசிம்மர்.

சுவாதி நட்சத்திரத்திற்கு தோஷம் கிடையாது.

நரசிம்மரை வழிபடுவதினால் ஜாதகத்தில் ராகுவினால் ஏற்படும் தடைகள், பிரச்சினைகள் நீங்கி நன்மை உண்டாகும். மேலும் பில்லி, சூனியம், எதிரிகளின் தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.

சுவாதி நட்சத்திரத்தில் நரசிம்மரை தொடர்ந்து வழிபாடு செய்தால் "ருண விமோசனம்' என்னும் கடன் தொல்லைகள் நீங்கும் பேறு ஏற்படும்; செல்வச் செழிப்பு உண்டாகும். வியாபாரம் அபிவிருத்தியாகும்.

நரசிம்மர் அவதாரம் எடுத்தது மாலை வேளையில் (பிரதோஷ காலம்). ஆதலால் சுவாதி நட்சத்திரத்தில், மாலை வேளையில் நரசிம்மரை வழிபாடு செய்வது சிறந்த பலனைத் தரும்.

# வேதக் கணிதத்தின் உதவியோடு இன்றும் உலக பிரச்சனை தீர்த்து வைக்கும் மகான்

பூரியைச் சேர்ந்த சங்கராச்சார்யா ஸ்ரீ சுவாமி நிஷ்சலானந்தா அவர்களின் புத்திசாலித்தனத்தை கொஞ்சம் அறிமுகப்படுத்துவோம்.

இஸ்ரோ அவர்களின் ஆலோசனையின் உதவியை அவ்வப்போது எடுத்துக் கொள்கிறது.

அமெரிக்க விண்வெளி ஏஜென்சியும் அவர்களின் ஆலோசனையை எடுத்துள்ளது. ஆலோசனைக் குழுவில் அவரது பெயரும் எழுதப்பட்டுள்ளது.

உலக வங்கி தனது உதவியை எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும், நிதிப் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும் என்ற விஷயத்தில் வேதக் கணிதத்தின் உதவியோடு பிரச்னைகளைத் தீர்த்து வைத்துள்ளார்.

ஆக்ஸ்போர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் கணிதவியலாளர்கள் தங்கள் சேவைகளை ஈடு படுத்துகின்றனர். இந்தியாவில் உள்ள ஐஐடிகள் மற்றும் ஐஐஎஸ்சிக்களும் அவர்களைத் தொடர்பு கொள்கின்றன.

மிக எளிமையான வாழ்க்கை இந்த ஞானி களுக்கு சொந்தமானது. இது அவர்களின் மிக சுருக்கமான அறிமுகம்.

பல செவ்வியல் நூல்களை எழுதியுள்ளார். இதிலிருந்து சிந்தித்துப் பாருங்கள், நம் முன்னோர்கள் எவ்வளவு அறிவாளிகள் என்று. அவரே பீகாரைச் சேர்ந்தவர். கோவர்தன் மடத்தின் இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். மனித வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்த முயல்பவர்கள். இவர்களுக்கு பிரபல்யமும் இல்லை, அரசியல் ஆதரவும் இல்லை.



e-magazine
aanmeegamalar.com

# உயிருக்கு தான் தேகத்தினிடத்திலே அதிகப் பற்று, மனதுக்கு இல்லை. அதனால் அது அடிக்கடி ஓடிப் போகிறது

சீடன்: கடவுளை எதற்காக எண்ண வேண்டும்?

ஞானி: இறந்து போன பின் எங்கே போக வேண்டும் என்பதற்காக கடவுளை எண்ணுவதில்லை. உயிருடன் இருக்கும் பொழுது எப்படி வாழவேண்டும் என்பதற்காக உபயோகப்படுவன் கடவுள்.

சீடன்: கடவுள் பக்தி எப்பொழுது துவங்கும்?

ஞானி: மனிதனின் இரண்டு கண்களுக்கு வெளிவேலை எப்பொழுது குறைகிறதோ அப்பொழுது கடவுள் பக்தி துவங்குகிறது.

சீடன்: அருள் எப்பொழுது கிடைக்கிறது?

ஞானி: மனம் கடவுளிடம் ஒட்டும்பொழுது.

சீடன்: உடல் சக்தி எப்பொழுது பெருகும்?

ஞானி: மனசக்தி குறையாமல் இருந்தால்.

சீடன்: அறியாமையை ஏன் கடவுள் படைத்தான்?

ஞானி: கடவுள் அதைப் படைக்கவில்லை. அவன் படைத்திருந்தால் அது மிக வலிமையுடையாதாக இருக்கும். அது மனித புத்தியின் சறுக்கல்.

சீடன்: செயலிலே சந்தோஷம் ஏற்படுவது எப்படி?

ஞானி: முடிவு எப்படி இருந்தாலும் பொருள் தெரிந்து செயல்படும்போது சந்தோஷம் ஏற்படுகிறது.

சீடன்: ஆஸ்திகன் செய்யும் தவறு என்ன?

ஞானி: ஆண் என்றால் இப்படி தான் இருக்கவேண்டும். பெண் என்றால் இப்படி தான் இருக்க வேண்டும் என்று சாஸ்திரத்தைசாட்சிக்கு அழைக்கும் ஆத்திகன், பக்தன் என்றால் இப்படி தான் இருக்க வேண்டும் என்றால் மட்டும், அதன்படி நடக்க மறுக்கிறானே, அது தான் தவறு.



சீடன்: அன்பு எப்பொழுது பொதுவாகிறது?

ஞானி: இறைவன் எல்லா உருவத்திலும் வருவான் என்ற நம்பிக்கை வரும்போது.

சீடன்: கடவுளை அடையாளம் கண்டு கொள்ள முடியுமா?

ஞானி: உன் வீட்டிலேயே இரண்டுகைகளோடோ அல்லது நான்கு கைகளோடோ சிவபெருமான் வந்தால் பக்தி இல்லாததால் உன்னால் அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியாது.

சீடன்: பட்டினி இருந்து பூஜை செய்தால் விசேஷமா?

ஞானி: பகவானையே நினைக்க முடியாத அளவுக்கு பட்டினி கிடக்கக் கூடாது.

சீடன்: உங்களால் எப்பொழுதும் எப்படி சிரிக்க முடிகிறது?

ஞானி: விட்டு விட்டு சிரிப்பது, விடாமல் சிரிப்பது என்ற இரண்டு வகை உண்டு. உலக வாழ்க்கையை விட்டு விட்டு சிரிப்பு "விட்டுட்டு" சிரிப்பது என்று எனது மூன்றாம் வகையாகும்.

சீடன்: ஏன் பூஜை முடிந்ததும் சுண்டல் தருகிறார்கள்?

ஞானி: சுண்டல் என்றாலே செய்து முடித்தது என்று பொருள், பூர்வ ஜென்மம் என்று அர்த்தம். பூர்வ ஜென்மத்தைப் பற்றி கவலைப் படாமல் தேவியை அணுகு. இந்த ஜென்மம் கடைதேறும்.

சீடன்: நவராத்திரி கொலு சொல்லும் விளக்கம் என்ன சுவாமி?

ஞானி: உலகக் கொலுவில் இந்தப் படியில் உட்கார்ந்திருப்பவன் இவன். எப்படி இவனை மாற்ற வேண்டும் என்று எண்ணுகிறாள் தேவி. எப்படி மாற வேண்டுமென்று தெரிந்து

e-magazine
aanmeegamalar.com

கொள்கிறவன் யோகி. ஜீவராசிகள் அனைத்தும் களிமண்ணால் ஆன பொம்மை என்று தெரியும்போது ஆணவம் செத்து சித்திக்கிறது.

சீடன்: தேவி எப்படிப்பட்டவள்?

ஞானி: தெரியாததால் தான் ஞானிகளும், பக்தர்களுமே முதலில் பாவனையாக தான் எண்ணுவார்கள்.

சீடன்: திருமாலின் தங்கையான அம்பாள் ஏன் பெருமாள் கோயிலில் இல்லை?

ஞானி: நிச்சயம் இருந்திருப்பாள், உங்கள் சைவ வைஷ்ணவ சண்டையைக் கண்டு தான் பயந்து ஓடி இருப்பாள்.

சீடன்: தங்கள் கருத்துக்கள் சில சமயம் தீவிரமாக உள்ளதே?

ஞானி: அவைகளை மனிதன் ஞானத்துடன் தெளிவுடன் கேட்டால் தான் சரியாகப் புரியும்.

சீடன்: அது எப்படி?

ஞானி: நமக்குள்ளே சுவாமி சிரிப்பது தெரியும்.

சீடன்: உணர முடிவதில்லையே?

ஞானி: உயிருக்கு தான் தேகத்தினிடத்திலே அதிகப் பற்று, மனதுக்கு அவ்வளவு பற்று இல்லை. அதனால் அது அடிக்கடி ஓடிப் போகிறது. அதை ஓடாமல் கட்டுப் படுத்த பக்தி செய். இறைவன் சிரிப்பது தெரியும்.

சீடன்: மகான்களுக்கு இது எளிதாக உள்ளதே?

ஞானி: மகானும் உன்னைப் போல மனிதன் தானே. ஆனால் எப்பொழுதும் கடவுளையே பொருட்படுத்திக் கொண் டிருப்பதால் உலக விஷயங்களில் சலனம் ஏற்படாது.

சீடன்: ஞானிகளின், மகான்களின் உலக, தேக விஷயங்கள்?

ஞானி: விட்டவர்களுக்குதான் கடவுளின் விளையாட்டு புரியும். ஞானிகளின் தேக, உலக அபிமானத்தை ஆண்டவன் ஏற்கிறான்.

சீடன்: இது சராசரி மனிதனுக்கு வருவதில்லை, வரப்போவ துமில்லை?

ஞானி: அப்படிச் சொல்லாதே. வராததால் நாம் பாபிகள் என்று அர்த்தமில்லை. புண்ணியத்தை சேர்க்கத் துவங்கவில்லை அவ்வளவுதான்.

சீடன்: எங்களை உற்சாகப்படுத்த எளிமையாக்குகிறீர்கள்?


ஞானி: அப்படியல்ல. உங்களில் அநேகம் பேருக்கு ஆசை இருக்கிறது. அது அனுபவமாகும் போது அது சரி ஆகிவிடும். அதற்கு பக்தி செய்யத் தொடங்கு.

சீடன்: மந்திரம் என்றால் என்ன?

ஞானி: உருவத்தை எடுத்துக் காட்டும் சொல்லே மந்திரம்.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203



e-magazine
aanmeegamalar.com

# முதன்முறையாக ராகுகால வழிபாடு நடைபெற்ற கோவில்

e-magazine
aanmeegamalar.com

கும்பகோணம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலின் திருச்சுற்றில் இராகுகால காளிகா பரமேஸ்வரிக்கு தனியாக சன்னதி உள்ளது. சன்னதியின் முன்புறம் வலப்புறம் விநாயகரும், இடப்புறம் நாகமும் காணப்படுகின்றன.

இக்கோயிலில் உள்ள காளிகா பரமேஸ்வரிக் குத் தான் தென்னிந்தியாவிலேயே முதன்முறை யாக ராகுகால வழிபாடு நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

விஸ்வகர்மா சமூகத்தினரின் குலதெய்வம் காமாக்ஷி என்பதால் இந்தக் கோயில் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. அவர்களால் இந்த கோவில் நிர்வகிக்கப்படுகிறது.

இந்த கோவிலின் மற்றொரு தனிச்சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு நாளும் செய்யப்படும் ராகு கால பூஜை.

ஒருவேளை ராகு கால பூஜை தொடங்கும் முதல் கோவில்களில் இதுவும் ஒன்றாக இருந் திருக்க வேண்டும்.

இந்த பூஜைக்காக, பக்தர்கள் முதலில் ராஜா கணபதியை வணங்கி, பின்னர் காளிகா பரமேஸ்வரிக்கு (ராகு கால காளி) பூஜையில் பங்கேற்கிறார்கள்.

ராகுகாலத்தின் போது இவளை வழிபட்டால் அனைத்து பிரச்சனைகளும் தீரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

தமிழ் மாத புரட்டாசி பூரம் நட்சத்திரத்தில் (செப்அக்டோபர்), சுமங்கலி பூஜை பெரிய அள வில் நடத்தப்படுகிறது.

திருமணம் செய்து கொள்ள விரும்பும் பெண்கள், அவரிடம் பிரார்த்தனை செய்யுங்கள், அது பெரும்பாலும் வெற்றியில் முடிவடையும் என்று நம்பப்படுகிறது.

திருமணத்திற்கு காத்திருக்கும் கன்னிப் பெண்கள், நல்ல வரன் கிடைக்க கன்னிகா பரமேஸ்வரியிடம் பிரார்த்தனை செய்யுங்கள். இந்தக் கோயிலுக்குச் செல்வது காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்குச் சென்றதற்குச் சமம்.



– எம்.அசோக்ராஜா அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி, செல்: 9750333265

# சரீரமும் நவகிரகமும்

கிரஹம் என்னும் சமஸ்கிருத சொல்லுக்கு பற்றி இழுப்பது என்று பொருள். ஒன்பது கிரகங்களும் வான்வெளி மண்டலத்தில் தனித்தனியே திகழ்கிறது.

இரும்பு துகள்களை காந்தம் எப்படி தன்னிடம் இழுக்கின்றதோ, அவ்வாறே நவகிரங்களும் தங்களுக்கே உரிதான இழுக்கின்ற சக்தியின் வாயிலாக வாழ்க்கையில் ஏற்பட வேண்டிய சுக துக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ள மனிதனின் மனநிலையை அதற்கு ஏற்றவாறு செயல்புரியச் செய்கின்றன.



படைத்தல், காத்தல், அழித்தல் என பரம்பொருள் இருக்க, நவகிரகங்களுக்கு அவசியம் என்ன? மனித சரீரம் என்ற தேசத்திற்கு சக லோக நாயகரான பரம்பொருளே தலைவர் எனினும், அந்தச் சரீரத்திலுள்ள ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு கிரகத்தை அவர் அதிகாரியாக நியமித்து இருக்கிறார்.

அவ்வாறு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் கிரகங்கள் அந்தந்த மனிதன் முன் ஜென்மங்களில் செய்த வினையை அனுசரித்து அதற்கு தகுந்த பலன்களைத் தத்தம் தசாபுத்திகள் நடக்கும் போது கொடுத்து வருகின்றன.

| | | |
|---|---|---|
| சூரியன் | – | தந்தை (ஆத்மா, எலும்பு). |
| சந்திரன் | – | தாய் (மனம், இரத்தம்). |
| செவ்வாய் மற்றும் ராகு | – | சகோதரர்கள் (பலம், மஜ்ஜை). |
| புதன் | – | தாய்மாமன் (வாக்கு, தோல்). |
| குரு | – | புத்திரக்காரன் (ஞானம், தசை, மாமிசம்). |
| சுக்கிரன் | – | களத்திரக்காரகன் (காமம், இந்திரியம்) |
| சனி, கேது | – | ஆயுள் (துக்கம், நரம்புத் தசை). |

ஒரு மனிதன் முன் ஜென்மத்தில் புண்ணியம் செய்தவனா, அவன் எலும்பு பலம் உள்ளதா, தந்தை எப்படிப்பட்டவர், அவர் ஆயுள் எப்படி என்பன போன்ற நுட்பங்களை எல்லாம் அவனுடைய சூரியன் இருக்கும் நிலையை அறிந்து சொல்ல முடியும். அதாவது கிரகங்கள் எல்லாம் நம் உடலில் குடி கொண்டிருக்கின்றன என்பதே உண்மையாகும்.

நமது உடலோடுதொடர்பு கொண்டு உள்ள கிரகங்களை திருப்தி செய்யவும், உடலில் அந்தந்த பாகங்களை வலிமைபடுத்தவும், அந்தந்த கிரகங்களுக்குரிய தானியங்களான நெல், துவரை, எள் போன்றவற்றை உபயோகித்து வருகிறோம்.

வாரந்தோறும் சனிக்கிழமைகளில் சனி கிரகத்தை திருப்தி செய்யும் முறையாக நல்லெண்ணெய் ஸ்நானம் செய்ய வேண்டும். இதன் மூலம் நீண்ட ஆயுளை அடைய சனி நீராடு என்பது பெரியோர்களின் வாக்கு ஆகும்.

இந்த செயல்கள் அனைத்தையும் நன்கு கண்டுணர்தால் உடை, உணவு, செயல், சேவைகள் போன்ற எல்லாவற்றையும் நம்மை அறியாமலே கிரகங்களின் பிரிதிக்காக நாம் செய்து வருகிறோம். இவ்வாறாக கிரகங்கள் நம் தினசரி வாழ்க்கையில் நம்முடன் ஒன்றி செயல்படுகின்றன.

– எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி, செல்: 9750333265

e-magazine
aanmeegamalar.com

# திருமண வரம் அருளும் கரந்தை ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர்





aanmeegamalar.com

மண்ணாய், விண்ணாய், காற்றாய், நெருப்பாய், நீராய்த் திகழும் சிவபரம்பொருள் கருணையின் வடிவாகவும் திகழப் பெறுகின்றார். அவ்வாறு பெருங்கருணையின் ஊற்றாக கருணாஸ்வாமி என்கிற பெயரில் அருள்பாலிக்கின்றார். எங்கு? சோழர்கள் கோலோச்சிய தஞ்சை மண்ணில் தான்.

பெருவுடையாராக பெருமான் வீற்றருளும் இந்தத் தஞ்சை மாநகரில்.... வெண்ணாற்றுக்கு தெற்கிலும், வீரசோழன் என்னும் வடவாற்றுக்கு வடக்கிலும், இவ்விரு ஆறுகளுக்கு நடுவே அமைந்துள்ளது கரந்தட்டாங்குடி. தற்போது கரந்தை என்றும் கருணாஸ்வாமி கோவில் என்றும் வழங்கப்படுகின்றது.



மோ.கணேஷ்

ஆதியில் இத்தலம் கருந்திட்டைக்குடி என்று அழைக்கப்பட்டுள்ளது. அப்பர் தனது ஆறாம் திருமுறையின் அடைவுத் திருத்தாண்டகத்தில் இடர் களையும் தலங்களுல் ஒன் றாக, வைப்புத்தலமாக இத்திருத்தலத்தை போற்றி யுள்ளார்.

சப்த ரிஷிகளுல் ஒருவராகவும், தசரத சக்கரவர்த்தியின் குலகுருவாகவும் விளங்கிய ஸ்ரீ வசிஷ்ட மகரிஷி கற்புக்கரசியான தனது மனைவி அருந்ததியுடன் [ தமிழர்த் திருமணச் சடங்கில்....

அம்மி மிதிப்பது...

அருந்ததி பார்ப்பது...

என்பது காலம் காலமாக தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். இந்த அருந்ததி நட்சத்திரமாக









e-magazine
aanmeegamalar.com

வானில் மின்னுகின்றாள். அதோடு, பூவுலகில் மனிதர்களுக்கு திருமணம் நடந்திட வரம் வாங்கி வந்தவள்] இத்தலத்தினில் தீர்த்தம் உண்டாக்கி, சிவனை வழிபட்டுள்ளார். இதனால் இப்பதி ஈசர் ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் என்று போற்றலானார்.

கல்லணை கட்டிய கரிகாலச் சோழனுக்கு ஒரு சமயம் கருங் குஷ்டம் என்னும் தோல் நோய் பிடித்து வாட்டியது. இந்நோய் தீர..... பல்வேறு சிகிச்சைகளையும் மேற்கொண்டார். இருப்பினும், பலனில்லை. சிறந்த சிவ பக்தரான இவரது கனவில் தோன்றிய கங்காதரர், கருந்திட்டைக்குடிக்கு வருமாறு கட்டளை யிட்டார். கருணாஸ்வாமியின் கட்டளை அல்லவா.....கண்விழித்த கரிகாலன் தனது படைகளுடன் தஞ்சையை அடைந்து, சகோதரன் இராஜராஜன் அரண்மனையில் தங்கினார். அனுதினமும் கருத்திட்டைக்குடியில் வசிஷ்ட தீர்த்தத்தில் நீராடி, மகேசரை மனமொன்றி வடிவொட்டார். ஒரு மண்டலம் இவ்வாறு வழிபட்டதன் பலனாக, கருணாஸ்வாமியின் கருணையினால் கருங்குஷ்ட நோய் நீங்கி, பூரண சுகம் பெற்றார். ஈசனது ஆலயத்தையும் திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நடத்தினார்.

தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட 88 ஆலயங்களுல் ஒன்றாகத் திகழ்கிறது இக்கரந்தை சிவாலயம். தஞ்சையை விடவும் மிகவும் பழமை வாய்ந்தது. சிறிய இராஜகோபுரத்துடனான தென்முக வாயில். இதன் வழியே பக்தர்கள் சென்று வருகின்றனர் உள்ளே... விசாலமான பிரகாரங்கள். கிழக்கு வாயில் ஒன்றும், தெற்கு வாயில் ஒன்றும் காணப்படுகின்றது. கிழக்குப்புற வாயில் முன்பு பிரம்மாண்டமான திருக்குளம். வசிஷ்ட தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. பார்ப்போரை பிரம்மிப்பினில் ஆழ்த்தும் இந்த தீர்த்தம். ஈசன் சன்னிதி கிழக்கே முகம் கொண்டுள்ளது.

சிவன் சன்னிதி கற்றளியாக கவின்மிகு சிற்பங்களைக் கொண்டு வியப்படையச் செய் கிறது. மூலஸ்தானத்தில் அழகிய லிங்கத் திருமேனி கொண்டு அருள்பாலிக்கின்றார் ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர். இவர் கருவேலநாதர் என்றும் கருணாஸ்வாமி என்றும்கூட அழைக்கப் படுகின்றார்.

அம்பாள் சன்னதி தென்முகமாக அமையப்பெற் றுள்ளது. கருவறையுள் சாந்த முகத்துடன் புன்னகை சிந்துகின்றாள் அன்னை ஸ்ரீ பிரஹன்நாயகி. இவ்வன்னையை பெரியநாயகி என்றும் திரிபுரசுந்தரி என்றும் கூட வர்ணிக்கின்றனர்.

நவகோஷ்ட அமைப்பிலான கோஷ்டமாடங் களில்.... நடராஜர், பிக்ஷாடணர், வீணாதர தக்ஷிணா மூர்த்தி, திருமால் பிரம்மா, கங்கா தரர், அருந்ததியுடனான வசிஷ்டர், அர்த்தநாரீ ஸ்வரர், கங்காவிசர்ஜனர் ஆகிய திருவுருவச் சிலைகள் சோழர் கலைப் பாணியில் அற்புதமாக








புதைக்கப்பட்டுள்ளது.

ஸ்வாமி சன்னிதிக்கு பின்புறம் தல விருக்ஷமான வன்னி மரம் உள்ளது. திருமாளிகப்பத்தி வவ்வாள் நெற்றியமைப்புடன் அழகுற திகழ்கின்றது. நிருர்த்தி திக்கில் தல கணபதியும், மேற்கில் வள்ளி தெய்வானை உடனான சுப்ரமணியரும், வாயு பாகத்தில் கஜலட்சுமியும் சன்னிதி கொண்டுள்ளனர். மேற்கில் வருணலிங்கம் காணப்படுகின்றது. மழை வராத காலங்களில் இந்த லிங்கத்தை நீரால் மூழ்கச்செய்து மழையை பெறுகின்றனர் தஞ்சை வாழ் பக்தர்கள்.

அழகிய ஆலயம். கலைக்கூடமாக திகழ்கிறது. அளவில் பெரிய திருக்குளம். மீண்டும் செல்ல ஆவல் கூடுகிறது. முதலாம் பராந்தகனால் கட்டப்பட்ட இவ்வாலயத்தில், அவரது கல்வெட்டுகள் அதிகமாக காணப்படுகின்றது. அதோடு, உத்தம சோழன் மற்றும் முதலாம் இராஜராஜன் கால கல்வெட்டுகளும் காணக் கிடைக்கின்றன. கல்வெட்டில் இத்தல ஈசர் கருந்திட்டை மகாதேவர் என்று பொறிக் கப்பட்டுள்ளது.

ஆன்மிகமலர்

சோழர்கள் மட்டுமில்லாது பல்லவர்களும் இவ்வாலய திருப்பணிகளை செய்துள்ளனர். இராஜேந்திர சோழனால் வெளியிடப்பட்ட செப்பேடுகள் இங்கே அதிக அளவில் கிடைத்துள்ளன. அதில் நிர்வாகம், நீர்ப்பாசனம், வரிவிதிப்பு, கிராம அமைப்பு உள்ளிட்ட எண்ணற்ற செய்திகள் அடங்கியுள்ளன. விஜயநகர மன்னர்களின் செப்பு தகடுகளும் இங்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

சோழர்களுக்கு பின்னால் ஆட்சி செய்த நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும்கூட இவ்வாலயத்தை திருப்பணி செய்துள்ளனர். மராட்டிய மகாராணிகள் இருவர் கண்ணாடி பல்லக்கு ஒன்றையும், வெட்டிவேர் பல்லக்கு ஒன்றையும் தயாரித்து பரிசாக வழங்கியுள்ளனர்.

பங்குனி மாதம் 3, 4 மற்றும் 5ஆம் தேதிகளில் சூரிய ஒளி ஸ்வாமி மீது படரும் சூரிய பூஜை வெகு விமரிசையாக நடைபெறுகின்றது. இதில் பக்தர்கள் பலர் கலந்து கொண்டு அருள் பெறுகின்றனர்.

வசிஷ்டர் அருந்ததி திருமண வைபவம் வருடா வருடம் வைகாசி ரோகிணியன்று நடைபெறுகின்றது. அதைத் தொடர்ந்து கொடியேற்றத்துடன் வைகாசி பிரம்மோற்சவம் சீரும் சிறப்புடன் நடத்தப்படுகின்றன. அதில் 11ஆம் நாள் பிக்ஷாடணர் கரந்தையில் வீதி வலம் வருவார். 12ஆம் நாள் கண்ணாடிப் பல்லக்கினில் ஸ்வாமி அம்பாள் புறப்படுகின்றனர். கண்ணாடி பல்லக்கினில் சோமாஸ்கந்தரும், பெரியநாயகி அம்மையும் செல்ல.... வெட்டிவேர் பல்லக்கில் வசிஷ்டரும், அவரது பத்தினியுமான அருந்ததிதேவியும் தொடர்ந்து செல்வர். கரந்தை வசிஷ்டேஸ்வரர் (இங்கு)தொடங்கி, வெண்ணாற்றங்கரை தஞ்சபுரீஸ்வரர் கோயில், தென்குடிதிட்டை ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் கோவில்,




கூடலூர் சொக்கநாதர் கோவில், கடகடப்பை இராஜராஜேஸ்வரர் கோவில், புன்னைநல்லூர் கைலாசநாதர் கோவில், தஞ்சை கீழவாசல் பூமாலை வைத்தியநாதர் ஆலயம் ஆகிய ஏழு ஊர்களுக்கு சென்று காட்சியருளி, மண்டகப்படிகள் ஏற்று, ஏழு ஊர்கள் வலம் வந்து பின்பு கரந்தைக்குத் திரும்புகின்றார். ஏனைய வருடாந்திர சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புற அனுசரிக்கப்படுகின்றன.

தினமும் நான்கு கால பூஜைகள் நடந்திடும் இவ்வாலயம் காலை 7:30 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8:30 மணி வரையும் திறந்திருக்கும்.

இவ்வாலயத்தில் 48 நாட்கள் (ஒரு மண்டலம்) தீர்த்த நீராடி, ஸ்ரீ வசிஷ்டேஸ்வரப் பெருமானை பக்தியுடன் வழிபட, தீராத நோய்கள் தீரும் என்பது இங்கு வரும் பக்தர்களின் நம்பிக்கையாகும். அதோடு, திருமணம், உயர்கல்வி, உயர்ப் பதவிகள், ஆட்சித் திறமை, செல்வம், பகை வெல்லுதல், ஆற்றல் ஆகியவற்றையும் பெறலாம். ஸ்ரீ வசிஷ்டேஸ்வரருக்கும், பெரியநாயகி அம்பிகைக்கும் திருமண வைபவத்தை நடத்தி, பலரது திருமண தடைகள் நீங்கி, சுபிக்ஷமுடன் வாழ்கின்றனர்.

தஞ்சை கும்பகோணம் சாலையில் தஞ்சையின் ஓர் பகுதியாக திகழ்கிறது கரந்தை என்னும் கரந்தட்டாங்குடி.

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு:
9789156179.

# அற்புதமான நரசிம்மர் ஸ்தலம்

தமிழ்நாட்டில் அமைந்துள்ள நரசிம்ம தலங்களில் இது ஒரு சிறப்பான ஒன்று. இக்கோவில் தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூரில் அமைந்துள்ளது. நரசிம்மர் பதினாறு கரங்களுடன் காட்சியளிக்கிறார். இந்தியாவில், 16 கரங்களுடன் நரசிம்மர் காட்சி தரும் மூன்று தலங்களுள் இதுவும் ஒன் றாகும்.


மற்ற இரு கோயில்களில் ஒன்று இராஜஸ் தானிலும் மற்றொன்று தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்திலுள்ள சிங்கிரிகுடி அல்லது சிங்கர் குடி என்னும் ஊரிலும் அமைந்துள்ளன.

தட்சிண அகோபிலம் என அழைக்கப்படும் இந்த க்ஷேத்திரத்தில், நரசிம்மர் திரிபங்க நிலையில், ஹிரண்ய சம்ஹாரம் செய்யும் திருக் கோலத்தில், 16 திருக்கரங்களுடன் எழுந்தருளி யுள்ளார்.

சூரியனும் சந்திரனும் வெண்சாமரம் வீசி சாந்தப்படுத்திக் கொண்டிருக்க, தலையில் கிரீடத் துடன் காட்சிதரும் நரசிம்மரை நாரதர், பிரகலாதன், அவனுடைய தாய், தாத்தா காசியப்ப மகரிஷி ஆகியோர் சரணடைந்து வணங்கினால், அவர்களை ஆசிர்வதித்துக் கொண்டிருக்கிறார் நரசிம்மர்.

வழிபடும் முறை: நரசிம்மர் தீர்த்தத்தைத் தலையில் தெளித்துக்கொண்ட பிறகு, கன்னிமூல கணபதியை வணங்கி, வேங்கடாஜலபதி நரசிம்மரை 16 முறை பிரதட்சணமாக வலம்வந்து வழிபாடு செய்து, அருகிலுள்ள வாலி பூஜை செய்து வழிபட்ட சிவகாமி அம்மாள் சமேத திருவாலீஸ்வரரை வணங்கினால்தான் க்ஷேத்திர வழிபாடு நிறைவு பெற்று முழுப்பலனும் கிட்டும். இத்தலம் தென்காசி திருநெல்வேலி நெடுஞ்சாலையிலுள்ள பாவூர் சத்திரத்திலிருந்து 2 கி.மீ. அருகில் உள்ளது.

e-magazine
aanmeegamalar.com


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
FREE
170 e-books
1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்
eBook
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர்.காம் வெளியிடும்

# சித்தர்கள், மகான்கள், ஞானிகள் மாத காலண்டர்



இதுவரை யாரும் வெளியிடாத சித்தர்கள் காலண்டர்

ஆன்மிகமலர்.காம்

தமிழில் இதுவரை யாரும் வெளியிடாத வகையில், பஞ்சாங்க குறிப்புகள், விஷேசங்கள், நல்லநேரம், அஷ்டமி, பௌர்ணமி அமாவாசை திதி அரசு விடுமுறை தினங்கள், முக்கிய திருவிழாக்கள் போன்ற தகவல்களுடன் மினி பஞ்சாங்கமே உள்ளடக்கிய மாத காலண்டர், ஒவ்வொரு மாதத்திற்கும் பெரிய அளவிலான அழகிய தெய்வபடங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

அவசியம் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய பொக்கிஷம்.

தகவல்களுக்கு: 9994162182/ 9994323622/ 9444228203

# சீத்தாப் பழத்தின் மகத்துவங்கள்

## முடி உதிர்தல், பேன், பொடுகு நீங்க

சீத்தாப் பழத்தின் விதைகளை பொடியாக்கி, பாசிப்பயிறு இவை இரண்டையும் சமஅளவு எடுத்து கலந்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் முடி மிருதுவாகும். முடி உதிராது. பேன்கள் ஒழிந்துவிடும். சீத்தாப் பழத்தின் விதைகளை பொடியாக்கி அதனுடன் சிறிதளவு வெந்தயம், பாசிப்பயறு இரண்டையும் கலந்து இரவு ஊறவைத்து பின்னர் காலையில் அரைத்து தலையில் தேய்த்து ஊறியபின்னர் குளித்து வந்தால் தலைமுடி குளிர்ச்சி பெறும். பொடுகு மறையும்.

## தேமல் மறைய

சீதாப்பழத்துடன், சிறிது வெள்ளைப் பூண்டு வைத்து மையமாக அரைத்து, தேமல் மீது பூசி வந்தால் தேமல் மறையும்.

## சளி தொந்தரவு வராமல் தடுக்க

சீதாப்பழத்தில் கணிசமான அளவு விட்டமின் சி உள்ளதால், சளி பிடிக்காது தடுக்கும் தன்மையை உண்டாக்கும். சளி பிடித்தவர்கள், இந்தப் பழத்தைச் தொடர்ந்து சாப்பிட்டால் நன்கு வெளியேறி விரைவில் குணமாகும்.

## நிம்மதியான உறக்கத்திற்கு

சீதாப்பழத்துடன் இரண்டு பேரீச்சம் பழமும் சேர்த்து இரவில் படுக்கப் போகும் முன் சாப்பிட்டு வந்தால் நன்கு தூக்கம் வரும். தூக்கம் வராமல் அவதிப்படுபவர்களுக்கு, இது ஒரு நல்ல எளிய இயற்கை மருந்து.

## பித்தம் நீங்க

சீதாப்பழத்துடன், சிறிது இஞ்சிச்சாறு, கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வந்தால் பித்தம் மொத்தமாக விலகும்.

## சரும வறட்சி நீங்க

சீதாப்பழச்சாற்றை சரும வறட்சி உள்ளவர்கள் தினமும் குடித்து வந்தால், சரும வறட்சி நீங்கி இயல்பு நிலை பெறும்.

## குடற்புண் குணமாக

சீதாப்பழத்துடன் சிறிது வெந்தயத்தை ஊற வைத்து சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடற்புண் விரைவில் குணமாகும்.

## சிறுநீர் பிரிதல், நீர்க் கடுப்பு நீங்க

சீதாப்பழச் சாறுடன், சிறிது எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடித்து வந்தால் சிறுநீர் பிரியாமல் அவதிப்படுபவர்களுக்கு சிறுநீர் தாராளமாகப் பிரியும். நீர்க்கடுப்பும் நீங்கும்.



# ஆன்மிக செய்திகளும் அற்புத தகவல்களும்





## இழந்த செல்வம் மீட்டு தரும் “தென்குரங்காடுதுறை”

சம்பந்தரும், நாவுக்கரசரும் பாடிய ஆடுதுறை எனப்படும் தென்குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் “ ஆபத்சகாயேஸ்வரர் “ இழந்த செல்வங்களை மீட்டுத் தருபவர். வாலியால், துரத்தப்ஸ்பெயின் இன்பட்ட சுக்ரீவன், இத் தல நாயகனை வேண்ட, ஸ்ரீராமரின் அருள் கிடைத்து, தான் இழந்தசெல்வங்கள் அனைத்தையும் பெற்றான். வானராமகிய சுக்ரீவனால் பூஜிக்கப்பட்டதால், இத் தலம் “ தென்குரங்காடுதுறை “ என்றானது. கும்பகோணமிருந்து மாயவரம் செல்லும் சாலையில் சுமார் 25 கி.மீ. தொலைவில் இத் திருக்கோயில் அமைந்துள்ளது.

## கடன், சங்கடங்கள் போக்கும் “திருபுவனம் சரபேஸ்வரர்”

தீராத கடன் தொல்லைகள் தீர, பில்லி, சூனியம், ஏவல் போன்றவற்றிலிருந்து விடுபட, வழக்குகளில் வெற்றி பெற, கும்பகோணத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில், மயிலாடுதுறை வழித் தடத்தில் அமைந்துள்ள “திருபுவனம் “ சென்று அங்கு தனி சந்நதி கொண்டு வீற்றிருக்கும் “சரபேஸ்வரரை” வழிபடலாம். பறவை, விலங்கு, மனிதம் என மூன்று வடிவங்களை கொண்ட சரபர் சிவன், காளி, துர்க்கை மற்றும் விஷ்ணு என நான்கு கடவுளரின் ஒருமித்த ரூபம். வேண்டுவோரின் சங்கடங்கள் தீர்ப்பவர். துயர் துடைப்பவர்.

சூலினி, பிரத்தியங்கரா என இரு தேவியருடன் காட்சி தரும் சரபரை 11 விளக்கு, 11 சுற்று, 11 வாரம் என தரிசனம் செய்ய வழிபடுபவரது சங்கடங்கள் அனைத்தும் தீரும் என்பது நிச்சயம். ஞாயிற்று கிழமைகளின் ராகு கால வேளை சரபர் வழிபாட்டிற்கு மிகச் சிறந்த நேரம்.

## செல்வ வளம் பெருக சம்பந்தர் அருளிய பதிகம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்!
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே..!

## செல்வம் பெற வணங்க வேண்டிய தலம் "திருவாடுதுறை"

கும்பகோணம் மாயவரம் சாலையில் கும்ப கோணத்திலிருந்து சுமர் 10 கி.மீ. தொலைவில் உள்ளது ஆடுதுறை எனப்படும் "திருவாடுதுறை". ஞானசம்பந்தரிடம் அவர் தந்தை யாகம் செய்ய தேவையான பொருள் கேட்க, சம்பந்தரும் இத் தல இறைவன் மாசிலாமணி ஈஸ்வரரை வேண்டி பதிகம் பாட, பரம் பொருளும் 1000 பொற்காசுகள் கொண்ட பொற்கிளியை பலி பீடத்தின் மீது வைத்தருளினார்.

## வறுமை நீக்கும் கடன் நிவர்த்தி தலமாம் "திருச்சேறை"

ஒருவர் முற்பிறவிகளில் செய்த பாவங்கள் அனைத்தும் அடுத்தடுத்த பிறவிகளில் தொடர் கிறது. முன்வினைப் பயன்கள் அனைத்தும் பிறவிக் கடன்களாகின்றன. முற் பிறவி தீவினைகள் நீங்கவும், இப் பிறவியின் கடன்கள் தீரவும், வறுமை நீங்கி சுபிட்சமான வாழ்க்கை கிடைத்திடவும் வணங்க வேண்டிய இறைவன், திருச்சேறையில் செந்நெறியப்பர் ஆலயத்தில், தனி சந்நதி கொண்டுள்ள " ரிண விமோஷன லிங்கேஸ்வரர் ". கும்பகோணம் திருவாரூர் சாலையில் கும்பகோணத்தில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது இத் தலம். ரிண விமோஷனரை 11 திங்கட்கிழமைகள் அபிஷேக, ஆராதனை செய்து வழிபட்டு, பின்னர் மகாலஷ்மியையும், ஜேஷ்டா தேவியையும், பைரவரையும் வணங்கினால் வழிபடுபவரது வறுமையும், கடன்களும் தீரும். இத் தலத்தில் துர்க்கை சிவ துர்க்கை, விஷ்ணு துர்க்கை, வைஷ்ணவி என மூன்று வடிவங்களாக அருளு கிறாள். மாசி மாதத்தில் 13,14,15 தேதிகளில் சூரியனது கிரணங்கள் இறைவன் மீதும், இறைவி மீதும் நேரடியாக விழுவது தனி சிறப்பு..!

## பிரிந்துள்ள தம்பதியர் ஒன்று சேர "ஸ்ரீவாஞ்சியம்"

மன வேறுபாட்டால் பிரிந்து வாழும் தம்பதியர் ஒன்று சேர வழிபட வேண்டிய திருத் தலம், காசிக்கு இணையாக கருதப்படும், கும்பகோணத்தை அடுத்துள்ள "ஸ்ரீவாஞ்சியம்". காசி தேசத்தில் புண்ணியமும் வளரும். பாவமும் வளரும். ஆனால் இங்கு புண்ணியம் மட்டுமே வளரும். ராகுவும், கேதுவும் ஒரே திருமேனியில் காட்சி தரும் இத் தலம் பிள்ளைப் பேறு அருளும் தலம். ஏழரை, அஷ்டம மற்றும் கண்டகச் சனி திசைப் பரிகாரத் தலமாகும். இங்கு ஆயுஷ் ஹோமம், சஷ்டியப்த பூர்த்திகள் செய்ய நீண்ட ஆயுள் கிட்டும். இங்குள்ள குப்த கங்கையில் நீராடி பித்ரு காரியங்களைச் செய்தால் பித்ரு தோஷ நிவர்த்தி கிடைக்கும். ராகு கேதுவை வழிபட கால, சர்ப்ப தோஷம் நீங்கும். இத் தலத்தில் ஓர் இரவு தங்கினாலேயே செய்த பாவங்கள் அனைத்தும் தீர்ந்து முக்தி கிடைக்கும். ஸ்ரீயாகிய திருவை (மஹாலஷ்மி) பரந்தாமன் தனது வாஞ் சையில் விரும்பி சேர்த்ததால் இத் தலம் ஸ்ரீவாஞ் சியம் எனப் பெயர் பெற்றது. இங்குள்ள குப்த கங்கையில் நீராடி இறைவனையும், அம்பாளையும், மஹாலக்ஷ்மியையும் வழிபட்டால் பிரிந்துள்ள தம்பதியர் பிணக்குகள் அனைத்தும் தீர்ந்து ஒன்று சேர்வார்கள்.

பிதுர் தோஷம் நீக்கும் "ஆவூர் பஞ்ச பைரவர்கள் "கும்பகோணத்தை அடுத்துள்ள வலங்கைமான் அருகில் உள்ளது ஆவூர் பசுபதீ ஸ்வரர் திருக்கோயில். இறைவன் பசுபதீஸ்வரர்.

இறைவி பங்கஜவல்லி. வசிஷ்ட முனிவரால் சாபம் பெற்ற காமதேனு என்ற பசு இறைவனை பூஜித்து சாப விமோஷனம் பெற்றதால் இத் தலம் ஆவூர் ஆனது. ( ஆ என்றால் பசு ).

இத் திருத்தலத்தின் மற்றோர் சிறப்பம்சம் ஒரே பீடத்தில் குடிகொண்டுள்ள ஐந்து பைரவ மூர்த்திகள். தேய்பிறை அஷ்டமி திதிகளில் இந்த பஞ்ச பைரவரை வழிபட அனைத்து துன்பங்களும் நீங்குகிறது. இங்கு பஞ்ச பைரவர்

ஆன்மிகமலர்

e-magazine
aanmeegamalar.com

வழிபாடு சிறந்த “பிதுர் தோஷ நிவர்த்தியாகும்“.

சிலர் நல்ல சம்பாத்தியம் பெறுவர். ஆனால் பஞ்சம் தீராது. நல்ல திறமைகளை கொண்டிருப்பார்கள். ஆனால் சரியான வேலையோ அல்லது சம்பாத்தியமோ இருக்காது. அனைத்து செல்வங்களையும் பெற்றிருப்பர். ஆனால் வாழ்வில் நிம்மதி இருக்காது. இப்படி எத்தனையோ காரணம் கூற முடியாத தொல்லைகளுக்கு காரணம் “பிதுர் தோஷமே “. பிதுர் தோஷம் தீர்த்தால் அனைத்து வளங்களும் நமது வாழ்வில் தேடி வரும் என்பது நிச்சயம்.

## மாங்கல்ய தோஷம் நீக்கும் “பஞ்சமங்கள ஷேத்திரம் திருமங்கலக்குடி”

நவக்கிரகங்களுக்கு ஏற்பட்ட தோஷத்தை நீக்கியவர் கும்பகோணத்தை அடுத்துள்ள ஆடுதுறையில் அமைந்துள்ள “திருமங்கலக்குடி பிராணவரதேஸ்வரர்”. இத் தலம் மாங்கல்ய தோஷங்கள் நீக்கும் திருத்தலம் ஆகும். முதலாம் குலோத்துங்க சோழனின் மந்திரி ஒருவர் வரிப் பணத்தைக் கொண்டு இக் கோவிலை கட்டினான்.

இதனை அறிந்து சினமுற்ற மன்னன், அம் மந்திரியை சிரச் சேதம் செய்யுமாறு உத்தரவிட்டான். அஞ்சி நடுங்கிய மந்திரியின் மனைவி இத் தல மங்களாம்பிகையிடம் வேண்டினாள். மந்திரி தனது உடலை திருமங்கலக்குடியில் அடக்கம் செய்யுமாறு கேட்க, மன்னனும் அவ்வாறே செய்யுமாறு ஆணையிட்டான்.மந்திரியின் உயிரற்ற உடலை இத் தலம் எடுத்து வர, தனது பக்தையின் வேண்டுகோளுக்கிணங்க மந்திரியை உயிர்ப்பித்தாள் இத் தல நாயகி. இதனால் இவள் “ மங்களாம்பிகை” எனவும், பிராணனை திரும்ப கொடுத்ததால் இறைவன் “பிராண வரதேஸ்வரர் “ எனவும் வழிபடலாயினர். மாங்கல்ய தோஷத்தால் திருமண தடை உள்ளவர்கள் இத் தல நாயகியை வழிபட திருமணத் தடை நீங்கும். வழிபடும் பெண்களின் மாங்கல்ய பலம் பெருகும். இத் தலத்தின் பெயர் மங்களக்குடி, தல விநாயகர் மங்கள விநாயகர். அம்பாள் மங்களாம்பிகை. தீர்த்தம் மங்கள தீர்த்தம். விமானம் மங்கள விமானம். எனவே, இத் தலம் “ பஞ்ச மங்கள ஷேத்திரம் “ எனப்படுகிறது.


அழகுராஜா

## பெண் பாவம் தீர்க்கும் “திருவிசநல்லூர்”

திருவியலூர் எனப்படும் “ திருவிசநல்லூரில் “சிவயோகி நாதராய், அய்யன் குடிகொண்டுள்ளார். இவரை வணங்கினால், முற் பிறவியிலோ அல்லது இப் பிறப்பிலோ, தெரிந்தோ அல்லது தெரியாமலோ செய்த பாவங்கள் அனைத்தும் அகன்றுவிடும். பெண்களின் பாவதிற்க்கும், பழிக்கும் ஆளாகி அல்லல் படுவோர் சுகம் பெறுவர்.நந்தி தேவர், எம தர்மனை விரட்டி அடித்த இத் தலம் “ மரண பயம் “ நீக்கும் திருத் தலமாகும்.

## மரண கண்டம் நீக்கும் “திருநீலக்குடி”

ஜாதகத்தில் மரண கண்டம் உள்ளவர்கள் தமது எம பயம், மரண பயம் நீங்க வணங்க வேண்டிய திருக் கோயில், கும்பகோணம் காரைக்கால் சாலயில் கும்பகோணத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள, திருநீலகண்டராய் சிவ பெருமான் அருளும் “திருநீலக்குடியாகும்“. மூலவருக்கு செய்யப்படும் தைலாபிஷேகம் சிறப்பு வாய்ந்தது. எவ்வளவு எண்ணெய் அபிஷேகம் செய்தாலும், அவ்வளவும் பாணத்திற்குள் சென்றுவிடும். ராகு தோஷம் நீங்க உளுந்து, நீல வஸ்திரம், வெள்ளி நாகர், வெள்ளி பாத்திரம் போன்றவற்றை இத் தலத்தில் தானம் செய்ய வேண்டும். எம, மரண பயங்கள் நீங்க இத் தல இறைவனை வழிபட்டு, பின்னர் எருமை, நீல துணிகள், எள் போன்றவற்றை தானம் செய்யவேண்டும்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

**ஆன்மிகமலர்.காம்** வெளியிடும்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# இரண்டு வகையான மாத காலண்டர்கள்

## தெய்வீகப் படங்களுடன்

## சித்தர்கள், மகான்கள், ஞானிகள் படங்களுடன்




# 2024

அனைத்து
இல்லங்களிலும்
இருக்கவேண்டிய
அற்புத
காலண்டர்

## இது காலண்டர் அல்ல

# மினி பஞ்சாங்கம்

மேலும் தகவலுக்கு:

**9994162182/ 9994323622/ 9444228203**